# வள்ளுவர் கண்ட மனையறம்





பேராசிரியர் சுந்தர சண்முகனார்

# வள்ளுவர் கண்ட மனையறம்

ஆராய்ச்சி அறிஞர்
பேராசிரியர் **சுந்தர சண்முகனார்**
தமிழ் அகராதித் துறைப் பேராசிரியர்
தமிழக அரசின் திருவள்ளுவர் விருதாளர்

*வெளியீட்டகம்*
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
8, 2-ஆவது தெரு, வேங்கட நகர்,
புதுச்சேரி - **605 011**
பேசி : **(0413) 2213110**

# தமிழ் வாழ்த்து

தமிழரின் பெருமை சாற்றும்
தனிப்பெருஞ் சான்றாய் நின்றே
இமிழ்கடல் உலக மெங்கும்
இசையினைப் பரப்பி ஓங்கும்
அமிழ்தமே! மக்கட் காக்கும்
ஆருயிர் மருந்தே! தேனே!
தமிழெனும் ஒப்பில் தாயே!
தழைத்துநீ என்றும் வாழி!

- *சுந்தர சண்முகனார்*

## நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ***வள்ளுவர் கண்ட மனையறம்*** |
| நூலின் தன்மை | : | உரைநடை - வாழ்வியல் |
| ஆசிரியர் | : | பேரா. சுந்தர சண்முகனார் |
| உரிமை | : | பேரா. சு. ச. அறவணன் |
| நூற்பதிப்பு | : | முதற் பதிப்பு 1957<br>விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு : 26.04.2004 |
| படிகள் | : | 1200 |
| பக்கங்கள் | : | (vi) + 72 = 78 |
| தாள், எழுத்து | : | மேப்லித்தோ, 12 புள்ளிகள் |
| வெளியீடு | : | புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்<br>8, 2-ஆவது தெரு, வேங்கட நகர்,<br>புதுச்சேரி-605 011. பேசி: (0413) 2213110 |
| அச்சிட்டோர் | : | கம்பன் மறுதோன்றி அச்சகம்<br>414, கடலூர்ச் சாலை,நயினார்மண்டபம்,<br>புதுச்சேரி-605 004. பேசி : 2359587, 2357378 |
| விலை | : | உரு. **30.00** |



ஆராய்ச்சி அறிஞர்

## பேராசிரியர் சுந்தர சண்முகனார்

# பேராசிரியர் சுந்தர சண்முகனார்

## *ஒரு குறிப்பு*

*பிறப்பு :* **13.07.1922** *இறப்பு :* **30.10.1997**

*தந்தை :* திரு.சுந்தரம் *தாய் :* திருமதி அன்னபூரணி

*பிறந்த ஊர் :* புதுவண்டிப்பாளையம், கடலூர்.

*குரு : ஐந்தாம் பட்டத்து ஞானியார் அடிகள்*

**படைப்புகள் :** 69 நூல்கள் - விளக்கம் வருமாறு : கவிதை நூல்கள் -8, பெருங்காப்பியங்கள்-2, முழுஉரை நூல்கள்-7, திருக்குறள் ஆய்வுகள்-5, கம்பராமாயணத் திறனாய்வுகள்-6, அறிவியல் ஆய்வுகள்-6, பல்துறை ஆய்வுநூல்கள்-33, புதினங்கள்-2.

**தமிழுக்கு முன்னோடி நூல்கள் :** தமிழ் அகராதிக்கலை, கெடிலக்கரை நாகரிகம், தமிழ்நூல் தொகுப்புக் கலைக்களஞ்சியம், தமிழ் இலத்தீன் பாலம்.

**பெருங்காப்பியங்கள் :** கௌதம புத்தர் காப்பியம், அம்பிகாபதி காதல் காப்பியம்.

**பெற்ற பட்டங்களில் சில :** இயற்கவி, புதுப்படைப்புக்கலைஞர், ஆராய்ச்சி அறிஞர், திருக்குறள் நெறித்தோன்றல் முதலியன.

**பெற்ற விருதுகளில் சில :** தமிழக அரசின் "திருவள்ளுவர் விருது", மதுரைக் காமராசர் பல்கலைக்கழக "தமிழ்ப்பேரவைச் செம்மல் விருது", தமிழகப் புலவர் குழுவின் "தமிழ்ச்சான்றோர் விருது", சென்னை அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளை விருது முதலியன.

**பெற்ற பரிசுகள் :** சிறந்த நூல்களுக்கான நடுவண் அரசு, தமிழக அரசு, புதுச்சேரி அரசு மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பரிசுகள்.

**பாடமாக அமைக்கப்பட்ட நூல்கள் :** தமிழ் அகராதிக்கலை, தமிழர் கண்ட கல்வி, திருமுருகாற்றுப்படை தெளிவுரை, வாழும் வழி மற்றும் History of Tamil Lexicography.

❍ ❍ ❍

# பதிப்புரை

பேராசிரியர் சுந்தர சண்முகனார் அவர்கள் தன்னுடைய 26-ஆம் அகவை தொடங்கி திருக்குறள் பரப்பும் பணியில் ஈடுபட்டு வந்தவர். 1947,1948- ஆம் ஆண்டுகளில் "திருக்குறள் தெளிவுரை", "திருக்குறள் தெளிவு" என்ற பெயர்களில் குறள்களுக்கு விளக்கவுரை எழுதி வெளியிட்டார். 1958, 1959-ஆம் ஆண்டுகளில் "தெவிட்டாத திருக்குறள்" என்ற தன்னுடைய இதழ்மூலமாகத் திருக்குறளின் முப்பால்களிலிருந்தும் குறள்களைத் தெரிவுசெய்து ஆராய்ச்சி உரைகள் எழுதி வெளியிட்டு வந்தார்கள். தற்போது தங்கள் திருக்கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் "வள்ளுவர் கண்ட மனையறம்" என்னும் இந்நூல் 1957-ஆம் ஆண்டு இதே தலைப்பில் சிறிய வெளியீடாக ஒரு திருமண நிகழ்ச்சியில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. தற்போது அச்சிறிய வெளியீடு ஒரு நூலாக உருமாற்றம் செய்யப்பட்டு அதே தலைப்பில் வெளிவருகின்றது. பேராசிரியர் சுந்தர சண்முகனார் திருக்குறளின் முத்தான மூன்று அதிகாரங்களான "இல்வாழ்க்கை", "வாழ்க்கைத்துணைநலம்" மற்றும் "மக்கட்பேறு" ஆகியவற்றுள் அடங்கியுள்ள குறள்களுக்கு எழுதிய ஆய்வுரைகள் தொகுக்கப்பட்ட ஒரு புதிய நூலாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. "ஆராய்ச்சி அறிஞர்" என்று தமிழ் கூறும் நல்லுலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேராசிரியரின் ஆய்வு முத்திரைகள் இந்நூலில் பல இடங்களில் பளிச்சிடுகின்றன.

இந்நூல் வெளிவரத் தூண்டுகோலாக இருந்து தன் பொருட்செலவில் நூலினை வெளியிட்ட பேராசிரியர் சுந்தர சண்முகனார் அறக்கட்டளையின் தலைவர் உயர்திரு குமரேச திருநீலகண்டன் அவர்களுக்கு எங்களின் நன்றியினைக் காணிக்கையாக்குகிறோம். நூலினை சிறந்த முறையில் அழகுற அச்சிட்டுத் தந்த புதுச்சேரி கம்பன் மறுதோன்றி அச்சகத்தாருக்கும் எங்களின் நனி நன்றி உரித்தாகுக. பேராசிரியரின் நூல்களுக்குப் பேராதரவு தந்துவரும் அன்பர்கள் இந்நூலினையும் ஆதரித்திட வேண்டுகிறோம்.

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**

புதுச்சேரி-1
26.04.2004.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | இல்வாழ்க்கை | 3 |
| 3. | வாழ்க்கைத் துணைநலம் | 35 |
| 4. | மக்கள் பேறு | 56 |




# வள்ளுவர் கண்ட மனையறம்

## தோற்றுவாய்

## திருவள்ளுவரும் திருக்குறளும்

திருவள்ளுவரால் இயற்றப்பெற்ற திருக்குறள் தமிழ்நூல் மட்டுமன்று; தமிழர் நூல் மட்டுமன்று; உலக மொழிகள் பலவற்றுள் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளதோர் உலக நூலாகும். இந்நூல், வடமொழி, இந்தி முதலிய இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மனி, இலத்தின் முதலிய ஐரோப்பிய மொழிகளிலும் பெயர்த்தெழுதப் பெற்றுள்ளது. இதனால், இதனை "உலகமறை" என்றும் "பொதுமறை" என்றும் புகழ்ந்து கூறுவதுண்டு. பாரதியாரும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு" என்று பாராட்டிப் போந்தார்.

இத்தகைய திருக்குறளின் மாண்பினைப் பெரும்பாலான தமிழர்கள் இன்னும் அறிந்திலர், கற்றிலர். இவர்கள் எங்கே இதனை உலகிற்கு அறிமுகஞ் செய்து பரப்பப் போகின்றார்கள்? இவ்வாறு தமிழர்கள் தன்னை மறந்தாலும், திருக்குறள் தமிழர்களை மறந்திலது. தனது கருத்து வன்மையால் உலக மக்களைக் கவர்ந்து, அவர்தம் மொழிகளிற் பெயர்க்கப்பெற்றுத் தமிழையும் தமிழ் மக்களையும் உலகிற்கு அறிமுகஞ் செய்து வைத்திருக்கிறது இந்நூல். இவ்வரும்பெருஞ் செல்வத்தை அருளிப்போந்த திருவள்ளுவனார்க்கு உலகம் யாது கைம்மாறு செய்யவல்லதோ!

வள்ளுவப் பெருந்தகையார் திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார். இம்மூன்றனுள் அறத்தினை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பகுத்துள்ளார். வள்ளுவனார் இல்லறத்தை இருபது அதிகாரங்களுள் விளக்கியுள்ளார். இவ்விருபதனுள் மிகவும் இன்றியமையாத "இல்வாழ்க்கை", "வாழ்க்கைத் துணைநலம்", "மக்கட்பேறு" என்னும் முதல்மூன்று அதிகாரங்களை மட்டும் ஈண்டு எடுத்துக்கொள்ளலாம். இல்லறமாகிய மனையறத்தைப் பற்றியும் அம்மனையறத்து உறுப்பினர்களைப் பற்றியும் வள்ளுவர் கூறியாங்கு விளக்கிச் செல்லுதலின், இவ்வெளியீட்டிற்கு "வள்ளுவர் கண்ட மனையறம்" என்னும் பெயர் வழங்கப்பெற்றது.

இந்நூலில், அதிகாரப் பெயர் விளக்கமும், குறளும், பதவுரையும், பழம்பெரும் புலவராம் மணக்குடவர் உரையும், பரிமேலழகர் உரையும் நூலாசிரியரின் (சுந்தர சண்முகனாரின்) தெளிவுரையும், ஆராய்ச்சி உரையும், அதிகாரக் கருத்துச் சுருக்கமும் முறையே அமையும். அவை வருமாறு:-

# இல்லறம்

இல்லறம் என்றால் மனையறம். இல் என்றால் மனை அல்லது வீடு. வீட்டிற்குரிய காரணத்தாலேயே, மனைவிக்கு இல், இல்லாள், இற்கிழத்தி என்னும் பெயர்கள் எழுந்தன. எனவே, இல்லறம் என்றால், வீட்டில் மனைவி மக்கள் முதலியோர் சூழ இருந்து, அறநெறி தவறாமல் குடும்பம் நடாத்தும் வாழ்க்கை ஒழுங்கு என்பது பெறப்படும். இல்லற இயல் என்றால், அவ்வில்லறத்தின் இலக்கணங்களை அஃதாவது இல்லறத்தில் இருப்பவர்கள் இயற்றவேண்டிய கடமைகளைக் கூறும் பகுதி என்பது பொருள். முதற்கண் "இல்வாழ்க்கை" என்னும் அதிகாரம் வருமாறு :-

# இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை என்றால், ஆடவன் மனைவியுடன் வீட்டில் இருந்து நடாத்தும் குடும்ப வாழ்க்கை என்பது பொருள். இல்லறத்தின் பெருமையினையும், அதனால் உண்டாகும் நன்மையினையும், இல்லறத்தாரின் கடமையினையும் தொகுத்து, சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்னும் அழகுபட இவ்வதிகாரத்தில் கூறியிருத்தலின், இது முன் வைக்கப்பட்டது.

*1. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை.*

*(பதவுரை)* இல்வாழ்வான் என்பான் - வீட்டில் மனைவியுடன் இருந்து வாழும் குடும்ப வாழ்க்கையான் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன், இயல்பு உடைய - இயற்கையாக உரிமை உடையவர்களாக உள்ள, மூவர்க்கும் - (பெற்றோர், மனைவி, மக்கள் என்னும்) மூவகையார்க்கும், நல் ஆற்றின் (நல்வாழ்வு என்னும்) நல்ல வழியிலே, நின்ற - (உதவியாகக் கிடைக்கப் பெற்று) நின்ற, துணை-துணையாவான்.

இனி, முறையே மணக்குடவர் உரையும், பரிமேலழகர் உரையும் வருமாறு :-

*(மண-உரை)* இல்வாழ்வான் என்று சொல்லப்படுபவன் (பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி என்னும்) இயல்புடைய மூவர்க்கும் நல்ல வழியின்கண்ணே நின்ற ஒரு துணை.

*(பரி-உரை)* இல்லறத்தோடு கூடி வாழ்வான் என்று சொல்லப்படுவான் (பிரமசரிய ஒழுக்கத்தானும், வனத்தின் கண் தீயோடு சென்ற மனையாள் வழிபடத் தவம் செய்யும் ஒழுக்கத்தானும், முற்றுந்துறந்த யோக ஒழுக்கத்தானும் ஆகிய) அற இயல்பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம்.

*(தெளிவுரை)* ஒரு பெண், தன் இளம்பருவத்தில் பெற்றோரின் உதவியாலும், இடைத்தரமான பருவத்தில் கணவனின் உதவியாலும், கிழப்பருவத்தில் பிள்ளையின் உதவியாலும் வாழ்வதாகக் கூறுவதியல்பு. அதுபோலவே ஓர் ஆண்மகனும், இளம்பருவத்தில் பெற்றோர் உதவியாலும், இடைத்தரமான பருவத்தில் மனைவியின் உதவியாலும், கிழப்பருவத்தில் பிள்ளையின் உதவியாலும் வாழ்கின்றான். இம்முறையாக நோக்குங்கால், ஓர் இல்வாழ்வான் ஒருசேரத் தன் பெற்றோரையும் மனைவியையும், மக்களையும் காப்பாற்ற வேண்டிய கட்டாயக் கடமை உடையவனாய்க் காணப்படுகின்றான் என்பது தெளிவு. பொருட்செறிவுடைய கதையொன்றும் புகலப்படுவது உண்டு நம் நாட்டில்!

ஒருநாள் ஒரு விறகுவெட்டி எட்டணா சம்பாதித்தானாம். அவ்வணாக்களை அன்றைக்கே செலவழித்துவிட்டானாம். மெய்தானே! எட்டணா எப்படிப் போதும் ஒரு குடும்பத்திற்கு! ஆனால், அவன் அன்றிரவு தன் பக்கத்து வீட்டுக்காரனிடம் பின்வருமாறு பகர்ந்தானாம். இன்றைக்கு நான் எட்டணா சம்பாதித்தேன். அவற்றுள் இரண்டணாவைப் பழைய கடனுக்காகக் கொடுத்துவிட்டேன். நான்கணாவைக் குடும்பத்திற்காகச் செலவழித்துவிட்டேன். மீதி இரண்டணாவைப் பின்னால் உதவுவதற்காக உண்டிப்பெட்டியில் போட்டுவைத்துள்ளேன் என்பது விறகுவெட்டியின் செலவு விளக்கம். கேட்டான் பக்கத்து வீட்டுக்காரன். வியப்புடன், இக்காலமான காலத்தில் எட்டணா முழுவதுமே போதாதே! அப்படியிருக்கக் கடன் எப்படித் தந்தாய்? மிச்சப்படுத்தியது எப்படி? என்று வினவினான். பின் விறகுவெட்டி, பழைய கடனைக் கொடுத்தல் என்றால், இதற்குமுன் என்னைப் பெற்றுவளர்த்துச் செலவுசெய்து காப்பாற்றிய என் பெற்றோர்க்காக இரண்டணாவை ஒதுக்குதல்; குடும்பத்திற்குச் செலவழித்தல் என்றால் எனக்கும் என் மனைவிக்குமாக நான்கணாவை ஒதுக்குதல்; மிச்சப்படுத்துதல் என்றால், எதிர்காலத்தில் காப்பாற்றும் கடமைப்பட்டுள்ள பிள்ளைக்காக இரண்டணாவை ஒதுக்குதல் என்று மேலும் விளக்கம் செய்தானாம். இப்போது விளங்குமே இக்குறட்கருத்து!

*(ஆராய்ச்சி உரை )* திருமணம் ஆவதற்குமுன் உள்ள நிலைக்குப் பிரமசரியம் என்று பெயர்; திருமணமாகி மனைவியோடு வீட்டில் வாழும் நிலைக்குக் கிருகத்தம் என்று பெயர். வீட்டை விட்டு மனைவியுடன் காட்டையடைந்து தவம் செய்யும் நிலைக்கு வானப்பிரத்தம் என்று பெயர்; எல்லாவற்றையும் துறந்த தனித்த நிலைக்குச் சந்நியாசம் என்று பெயர். இது வடநூல் வைப்புமுறை. இந்நான்கு திறத்தாருள், கிருகத்தனாகிய இல்வாழ்வான் ஏனைய மூன்று திறத்தாரையும் காப்பாற்ற வேண்டும் என்றே இக்குறளுக்கு உரையாசிரியர் பலரும் உரை தீட்டிவிட்டனர். தமிழர்தம் கோட்பாடு இஃதன்று; இதனினும் வேறுபட்டது. சிறிது ஆராய்வோம்.

ஒருகால், அயல்நாட்டிலிருந்து தென்னாட்டுள் புகுந்தனர் ஆரியர். அவர்க்கென வீடுவாசல், நிலம், நீர் முதலியன இல்லை. அதனால் ஒன்றிய குடும்பத்துடன் ஓர் ஊர்க்குள் வாழமுடியவில்லை. பிள்ளைகளை ஓரிடத்தில் ஒண்டச்செய்தனர். அவருடைய பொழுதுபோக்கு நிலைக்குப் பிரமசரியம் எனப் பேர் தந்து, பிறர் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று பிழைப்புக்கு வழியும் செய்துவைத்தனர். சிலர் மட்டும் கணவனும், மனைவியுமாக ஊர்க்குள் உதவிபெற்று ஒன்றி வாழ்ந்தனர். அந்நிலைக்குக் கிருகத்தம் என்று பெயரிட்டனர். சிலர் ஊர்க்குள் புகுந்து பிச்சையெடுத்து உண்டு, கணவனும் மனைவியுமாகக் காட்டோரங்களில் தங்கலாயினர். இவர்தம் நிலைக்கு வானப்பிரத்தம் என்பது பெயர். ஒருதுறையும் அற்ற சிலர், முற்றத் துறந்த முனிவராகித் தனித்துத் திரிந்தனர். இவர்களே சந்நியாசிகள். எனவே, ஆரியர் தம் வரலாற்று நிலைக்கு ஏற்ப வர்ணாசிரமங்களை வகுத்துக்கொண்டனர் என்பது புலப்படும். இத்தகைய நெருக்கடியான நிலை தமிழர்தம் வரலாற்றில் என்றும் ஏற்பட்டதில்லை. ஆதலின் அவர்கள் எவ்வளவு ஏழ்மையாயிருப்பினும் தம் பிள்ளைகளைத் தம்முடனேயே வைத்து வளர்த்துவந்தார்கள். அதனால், தமிழர்க்கும் பிரமசரிய நிலைக்கும் தூரம் அதிகம். ஏனைய நிலைகளையும் இவ்விதமே கொள்ளவேண்டும். ஆனால், தமிழர்க்கு

இரண்டு நிலை உண்டு. (இவ்விரண்டினை மட்டுமே திருவள்ளுவர் தம் நூலுள் விவரித்துள்ளார்.)

அவையாவன :- ஒன்று, குறிப்பிட்ட காலம்வரையும் மனைவியுடன் கூடிச் சிற்றின்பம் நுகர்ந்து, உலகிற்குத் தொண்டாற்றும் உயர்ந்த இல்லற நிலை; மற்றொன்று, சிற்றின்பம் வெறுத்தபின், பேரின்பத்தில் விருப்புடையவராகிப் பிற உயிர்களிடம் பேரிரக்கம் பூண்டொழுகும் துறவற நிலை. இவ்விரு நிலைகளையே இல்லறஇயல், துறவறவியல் என இயம்பலானார் வள்ளுவனாரும். எனவே, தமிழர்தம் கோட்பாட்டுக்கும் திருவள்ளுவர் கருத்துக்கும் மாறாக, இக்குறளுக்கு உரையெழுதுதல் ஒரு சிறிதும் ஒவ்வாது என உணர்க.

ஆகவே, இக்குறளில் உள்ள "மூவர்" என்னும் சொல்லுக்குப் பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி எனப் பொருள் உரைக்காமல், பெற்றோர், பெண்டாட்டி, பிள்ளை எனப்பொருள் உரைத்தாம் யாம். பிறர் கூறும் வானப்பிரத்தனையும், சந்நியாசியையும், நம் வள்ளுவர் துறவி என ஒன்றாக அடக்கி, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதை, "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும்" என்னும் அடுத்த குறளில் கூறியுள்ளார். பிரமசாரியாய் இருந்து வறுமையுற்று வாடும் பிறருடைய பிள்ளைகளைத் "துவ்வாதவர்க்கும்" என்பதனுள் அடக்கிவிடலாம். ஆகவே, அடுத்த குறளையும் ஆராயின் அறிய வருமே உண்மை!

சிலர் திருமணம் ஆனதும் மனைவியின் வயப்பட்டுப் பெற்றோரைப் போதிய அளவு காப்பாற்றுவதில்லை. "தாய் தண்ணீர் இன்றித் தவிக்கின்றாள். தம்பி கும்பகோணத்தில் கோதானம் கொடுத்துக் கூத்தடிக்கின்றானாம்" என்னும் பழமொழி எழுந்ததும் இது குறித்தே. இன்னோரைத் திருத்துவதற்காகவே, "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தந்தை தாய்ப் பேண்" முதலிய பொன்மொழிகள் எழுந்தன. சிலர் குடித்தும், சூதாடியும், வைப்பாட்டியின் வயப்பட்டும் பெண்டாட்டி, பிள்ளைகளைக் காப்பாற்றாமல் அடித்துத் துரத்தி அல்லல் அடையச் செய்கின்றனர். எனவே, இல்வாழ்வார் எவரும் இனியும் இத்தகைய

தீய செயல்களுக்கு இடம்இல்லாமல், இம்முத்திறத்தாரையும் உணவு, உடை முதலியவற்றால் ஒழுங்காகக் காப்பாற்ற வேண்டும் என்று இக்குறளால் தெரிவித்துள்ளார் திருவள்ளுவர். இக்குறளுக்கு இவ்விதம் உரை செய்யாவிட்டால், மேற்கூறிய சில கருத்துக்களையெல்லாம் கூறாதுவிட்ட குறைபாடு ஆசிரியரை அடையும் அன்றோ? ஆய்க அறிஞர்!

*2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.*

*(பதவுரை)* இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தான் என்று சொல்லப்படுபவன், துறந்தார்க்கும் - (பற்றுக்களைத்) துறந்த பெரியாருக்கும், துவ்வாதவர்க்கும் - (ஏழ்மையால்) எவ்வித இன்பத்தையும் அநுபவிக்க முடியாத ஏழை எளியவருக்கும், இறந்தார்க்கும் - (ஆதரவின்றித் தம் பார்வையில்) இறந்து கிடப்போருக்கும் (அஃதாவது அனாதைப் பிணங்களுக்கும்) துணை - (தக்க) துணையாவான்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* வருணத்தினையும், நாமத்தினையும் துறந்தார்க்கும், துறவாது நல்குரவாளராய் உண்ணப் பெறாதார்க்கும், பிறராய் வந்து செத்தார்க்கும் இல்வாழ்வான் என்று சொல்லப்படுபவன் துணையாவான்.

*(பரி-உரை)* களைகண் ஆனவரால் துறக்கப்பட்டார்க்கும், நல்கூர்ந்தார்க்கும், ஒருவரும் இன்றித் தன்பால் வந்து இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான் துணை.

*(தெளிவுரை)* து என்றால் அநுபவித்தல், துவ்வாதவர் என்றால் அநுபவிக்காதவர் - அஃதாவது, இன்பம் அநுபவிக்க முடியாத ஏழை எளியவர்கள். இல்வாழ்வான், துறவிகளுக்கும், ஏழை எளியவர்களுக்கும் உணவு, உடை முதலியன உதவ வேண்டும்;

ஆதரவற்ற (அனாதைப்) பிணங்களை அப்புறப்படுத்தி இறுதிக்கடன் இயற்ற வேண்டும் என்பது கருத்து. ஆதரவில்லாப் பிணங்களை அப்புறப்படுத்துவது அறங்களுள் ஒன்றாக அக்காலத்தில் கருதப்பட்டது.

*(ஆராய்ச்சி உரை)* உரையாசிரியர்கள் பலரும், முன் குறளில் சொல்லப்பட்டுள்ள மூவருள் துறந்தாரையும் ஒருவராகச் சேர்த்துவிட்டார்கள் ஆதலின், இக்குறளில் உள்ள "துறந்தார்க்கும்" என்ற சொல்லைக் கண்டு திகைத்து, வேறு என்னென்ன பொருள்களையோ விளம்பி இடர்ப்படுகின்றனர். மணக்குடவர், முன் குறளில் உள்ள மூவருள் ஒருவராகிய துறவி, வருணத்தினையும், நாமத்தினையும் (சாதி சமயங்களை) துறவாதவர் என்றும், இக்குறளில் உள்ள துறவி, வருணத்தினையும் நாமத்தினையும் துறந்தவர் என்றும் வேற்றுமை காட்டிச் சரிசெய்யப் பார்க்கின்றார். துறவிகளுக்குள்ளேயே, வருண நாமங்களைத் துறந்தவர் என்றும், துறவாதவர் என்றும் இருவகை உண்டா? இல்லையே! வருண நாமங்களைத் துறவாதவர்களை எப்படித் துறவிகள் என்னும் பெயரால் அழைக்கமுடியும்? வருண நாமங்களையே துறவாதவர்கள் வேறு எவற்றைத்தாம் துறக்க உடன்படுவார்கள்? நிற்க-

பரிமேலழகரும், முன் குறளிலேயே துறந்தாரைக் கூறிவிட்டாராதலின், இக்குறளில் உள்ள துறந்தார் என்பதற்கும் துறவி எனப் பொருள்கூற உடன்பட்டிலர். ஆனால், இவரும் வேறுவிதமாகச் சரிசெய்யப் பாடுபட்டுள்ளார். அஃதாவது - துறந்தார் என்றால், இவ்வளவு நாள் காப்பாற்றி வந்தவர்களால் கைவிடப்பட்டவர்கள் (துறக்கப்பட்டவர்ககள்) என்று கூறியுள்ளார். இங்ஙனம் துரத்தப்பட்டு இன்பம் அநுபவிக்க முடியாமல் தவிப்பவர்களைத் "துவ்வாதவர்" என்பதற்குள் அடக்கிவிடலாமே! மற்றும், துறந்தார் என்னும் செய்வினையை, துறக்கப்பட்டார் எனச் செயப்பாட்டு வினையாக வலிந்துகொண்டு இடர்ப்படவும் வேண்டியதில்லையே! எனவே, ஈண்டு, துறந்தார் என்பதற்குப் பற்றுக்களைத் துறந்த பெரியோர்கள் என்று பொருள் கொள்வதே சாலப்பொருந்தும். அச்சொல்லுக்குரிய இயற்கைப்

பொருளும் அதுவே. தமக்கென ஒரு வருவாயும் தேடாமல், பிறர் நலத்திற்கே பாடுபடும் துறவிகளுக்கு உணவு, உடை முதலியனவற்றை இல்லறத்தான்தானே கொடுக்க வேண்டும். இன்னும், கண், கால் முதலிய உறுப்புக் குறைந்தவராகித் தொழில் செய்ய முடியாமல் பிச்சை எடுப்போரை, துவ்வாதவர் என்பதனுள் அடக்க வேண்டும்.

*3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்*
*கைம்புலத்தா றோம்பல் தலை.*

*(பதவுரை)* ஆங்கு - அவ்வில்வாழ்க்கையில், தென்புலத்தார் - (இறந்துபோய்த்) தென்திசையில் இருப்பவராகக் கருதப்படும் முன்னோரும், தெய்வம் - கடவுளும், விருந்து - (இதற்குமுன் வராத புதிய) விருந்தினரும், ஒக்கல்- சுற்றத்தார்களும், தான் - தானும் (அதாவது இல்வாழ்வானும்), என்ற - என்று சொல்லப்படுகின்ற, ஐம்புலத்து - ஐந்து வகையார் இடத்திலும் செய்யவேண்டிய, ஆறு- அற நெறியை, ஓம்பல் - தவறாமல் செய்தல், தலை - தலை சிறந்ததாகும். (ஆங்கு என்பதை அசையாகவும் தள்ளலாம்.)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண. உரை)* பிதிரர், தேவர், புதியராய் வந்தார், சுற்றத்தார், தான் என்னும் ஐந்திடமாகிய நெறியைக் கெடாமல் ஓம்புதல் தலையான இல்வாழ்க்கை.

*(பரி. உரை)* பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம். பிதிரர் ஆவார் படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கு இடம் தென்திசை ஆதலின், தென்புலத்தார் என்றார்.

*(தெளிவுரை)* தென்புலம் - தென்திசை. இறந்துபோனவர்களின் உயிர் தெற்கே செல்வதாக அக்காலத்து மக்கள் எண்ணிவந்தனர். அதற்கேற்பவே வள்ளுவரும் அறிவித்துள்ளார். எனவே,

இறந்துபோனவர்களை ஓம்புதல் என்றால் என்ன? தாய்தந்தையரோ, புலவர்களோ, துறவிகளோ, வள்ளல்களோ இறந்துவிட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்களின் உயிர் தென்புலத்தில் இருந்தால்தான் நமக்கென்ன? இல்லாவிட்டால்தான் நமக்கென்ன? அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்ததற்கு அறிகுறியாக - அவர்கள் இவ்வுலகிற்குத் தொண்டாற்றியதற்கு அடையாளமாக - அவர்களைப் போலவே ஏனையோரும் நல்வழியில் நடக்கவேண்டும் என்பதை நினைவுபடுத்தும் நெறியாக - அவர்களால் நன்மைபெற்ற நாம், அவர்கட்கு நன்றி செலுத்தும் வாயிலாக - அவர்கட்கு நினைவுநாள் கொண்டாடவேண்டும். இப்போதும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுகின்றோம் அல்லவா? இறந்துபோன தாய்தந்தையரை ஆண்டுதோறும் எண்ணி நன்றி பாராட்டுபவராக நடந்துகொள்கின்றோம் அல்லவா? இவைபோல்வனவற்றையே தென்புலத்தாரை ஓம்பல் எனத் தெரிவித்துள்ளார் திருவள்ளுவர்.

தெய்வத்தை ஓம்புதல் என்றால், ஓய்வும் உறுதியும் பெறுவதற்காகக் கடவுளை வழிபடுதல்.

விருந்து என்பதற்கு நேர்பொருள் புதுமை. "விருந்தே புதுமை" என்பது தொல்காப்பிய மூலம். வெள்ளை கறக்கிறது என்றால் வெள்ளையான பசு கறக்கிறது என்று பொருள்கொள்வதைப்போல, விருந்து வந்தது என்றால் புதிதான மனிதர் வந்தார் என்று பொருள் கொள்ளவேண்டும். இதற்குத்தான் ஆகுபெயர் என்று பெயர். ஆகுபெயர் என்றால் ஒன்றைக் குறிக்கும் ஒரு பெயர். அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்கு ஆகிவருவது. புதுமையைக் குறிக்கும் விருந்து என்னும் பெயர், புதிதாய் வருகின்ற மனிதர்க்கு ஆகிவருவதால் இஃது ஆகுபெயராகும். இதன் வகைகள் பல. ஈண்டு விரிப்பின் பெருகும். எனவே, முன்பின் வந்துகொண்டிருக்கும் தொடர்புடைய உறவினர்கள் விருந்தினர் ஆகமாட்டார் என்பதும், திடீரெனப் புதிதாக வருபவரே விருந்தினர் ஆவர் என்பதும் வெட்ட வெளிச்சம். திருக்குறள் விருந்தோம்பல் என்னும் பகுதியிலுள்ள "வருவிருந்து வைகலும்

ஓம்புவான்", "செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்" என்னும் குறட்பகுதிகளாலும் இதனைக் குறிப்பாய் உணரலாம். மேலும், இக்குறளிலேயே ஒக்கல் (சுற்றம்) என ஒன்று தனியாகக் கூறியுள்ளமையே, உறவினர் விருந்தினர் ஆகார் என்பதற்கு மறுக்கமுடியாத அகச்சான்றாகும். சரி நல்லது, புதிதாக வருபவரே விருந்தினர் என்பீராயின், அவர்களை முன்குறளில் உள்ள துறந்தார், துவ்வாதவர் என்பவர்க்குள் அடக்கிவிடக்கூடாதோ? என்று வினவலாம். அடக்கமுடியாது. ஏன்?

ஓர் ஊரில் விழா நடக்கின்றது, மாநாடு நடக்கின்றது. இன்னபிற சிறப்புக்கள் நடைபெறுகின்றன என்று வைத்துக்கொள்வோம். அவ்வூர்க்குப் புதிய மக்கள், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரண்டு வருவார்கள். அப்புதியோர்க்கு, ஊரினர் தங்கஇடம் அளிக்கலாம்; குளிக்கவும், குடிக்கவும் தண்ணீர் வசதி செய்து தரலாம்; இயலுமேல், வந்தவர்க்கும் உடன்பாடாகில் உணவும் அளிக்கலாம். செய்யப்பட வேண்டியதொன்றுதானே இஃது! இன்றும் நாட்டில் நடைபெறுகின்றதே இத்தகைய நிகழ்ச்சி! அன்றியும், புதிதாக வந்த இடத்தில் குறிப்பிட்ட சிலரைத் தவிர ஏனையோர் என்ன செய்யமுடியும்? ஊரார் உதவி இருந்தே தீரவேண்டும். இத்தகைய புதியோரைத் துறந்தார் என்று சொல்ல முடியுமா? அல்லது, துவ்வாதவர் என்றுதான் மொழிய முடியுமா? முடியவே முடியாதே! உண்மையான விருந்தினர் என்பவர் இப்புதியோரே! இன்னும் சிலர் (பிரயாணம்) வழி நடந்து செல்கிறார்கள். அவர்கள், வெய்யில் கடுமையாகக் காயும் நேரத்திலோ, இரவிலோ, மழை பெய்யும் நேரத்திலோ வழியில் உள்ள ஓர் ஊரில் தங்கிவிடுவார்கள். அவர்களும் அவ்வூரார்க்கு விருந்தினரேயாவர். ஏன் - இப்புதியோர், ஊராரின் உதவியின்றித் தம் கைப்பணத்தைக் கொண்டு, தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ள முடியாதா என்று சிலர் ஐயுறலாம். இங்கொரு செய்தியை நினைவுபடுத்தினால் இவ்வையத்திற்கு ஒருவாறு இடமிருக்காது. அஃதென்ன?

புகைவண்டி, நிலஊர்தி, வானஊர்தி முதலியவற்றின் மூலமாக வழி கடப்பது இந்தக் காலம்; பெரும்பாலும், கட்டை வண்டி, கால்நடையின் மூலமாக வழி கடந்தது அந்தக் காலம். தம்மூரில், தம் வீட்டில் காலை உணவு உண்டு, பின் தொலைவில் உள்ள வெளியூர்கட்குச் சென்று வேலையை முடித்துக்கொண்டு தம் வீடு திரும்பிவந்து அடுத்த வேளை உணவு உண்ணுவது இந்தக்காலம்; கட்டு சோறு கட்டிக்கொண்டு நாட்கணக்கில், வாரக்கணக்கில், மாதக்கணக்கில் வெளியூர்சென்று மீண்டது அந்தக்காலம். கண்ட இடங்களில், கண்ட நேரங்களில், கண்ட உணவுச்சாலைகட்குள் புகுந்து காசை இறைத்து வயிற்றை நிரப்புவதற்கு வாய்ப்பு மிகமிகக் கிடைக்கப் பெற்றிருப்பது இந்தக் காலம்; கட்டுசோற்று மூட்டை கரைந்த பின்பு, ஊர்க்குள் புகுந்து ஊராரின் உதவி பெற்றது அந்தக் காலம். எனவே, இல்லறத்தான் விருந்தோம்ப வேண்டும் என்று அந்தக் காலத்தில் வள்ளுவர் வற்புறுத்தியிருப்பது பொருத்தந்தானே! எல்லாம் வளர்ச்சி பெற்ற இந்தக்காலத்திலும் இவ்விருந்தோம்பல் தேவைப்படுகின்ற தென்றால் மேலும் கூறுவானேன்?

எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய்க்கே (எள்+நெய்) எண்ணெய் என்று பெயர்; அந்தப் பெயர், பின்பு தன்னோடு ஓரளவு ஒப்புமை உடைய ஏனைய எண்ணெய்களுக்கும் வழங்கப்பட்டதைப்போல, புதியோரைக் குறிக்கும் விருந்து என்னும் பெயர், பின்பு அவரைப்போல் வந்து போகும் உறவினர்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, இதுகாறும் கூறியவற்றால், தம்மை நாடிவரும் புதிய விருந்தினரை ஓம்ப வேண்டியது இல்லறத்தானுக்குரிய கடமைகளுள் ஒன்று என்பது உணரப்பெறும்.

ஒக்கல் என்றால் சுற்றத்தார்கள். இல்லறத்தான் தன்னைச் சேர்ந்த சுற்றத்தார்களையும் ஓம்பவேண்டும். செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்கல் என்பது நாம் அறிந்ததுதானே!

முதல் குறளில் உள்ள "இயல்புடைய மூவர்" என்பதற்கு, பெற்றோர், பெண்டாட்டி, பிள்ளை என்னும் மூவர் எனப் பொருள்

உரைத்தாம் யாம். ஏன் - அம்மூவரையும் இக்குறளில் உள்ள சுற்றத்தாருக்குள் அடக்கிவிடக் கூடாதா? என்ற வினா எழலாம் ஈண்டு. அடக்கமுடியாது. ஏன்?

ஒருவன், தன் பெற்றோர், மனைவி, மக்கள் எனும் மூவகையாரோடு கொள்ளும் தொடர்புக்கும், ஏனைய சுற்றத்தார்களோடு கொள்ளும் தொடர்புக்கும் வேற்றுமை மிக உண்டு. வெளியூருக்குச் சென்ற பெற்றோரோ, மனைவியோ, மக்களோ திரும்ப வீட்டிற்கு வந்தால், வீட்டிற்குரியவன் பிறரை நோக்கி, என் வீட்டிற்குச் சொந்தக்காரர் வந்திருக்கிறார் என்றோ, விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள் என்றோ சொல்லும் வழக்கம் எங்கும், என்றும் இல்லை. ஏனைய உறவினர் வந்தால் அப்படிச் சொல்லுவது உண்டு. தமையன், தமக்கை, தம்பி, தங்கை என்பவரும் தனித்தனிக் குடும்பத்தினராக ஆய்விடுவதால் அவர்களும் விருந்தாளிகளாகக் கருதப்பட்டு விடுவதை நாம் வாழ்க்கையில் கண்டே வருகின்றோம். மேலும், ஒருவன் தன் பெற்றோர், பெண்டாட்டி, பிள்ளை என்பவர்க்கு உரிய உடைமைகளையெல்லாம், ஏறக்குறையத் தனக்கும் உரியனவாக எண்ணுகின்றான். ஏனையோர் உடைமைகளை அங்ஙனம் எண்ணுவது இல்லை. எனவே, இம்மூவரும் ஏனையோரைப் போலச் சுற்றத்தார் என்னும் சொற்குள் கட்டுப்படாமல், பிரிக்கமுடியாத குடும்ப உறுப்பினர்களாகக் கருதப்படுகின்றார்கள் என்பது இனிது புலனாகும். இதற்கு அகச்சான்று வேண்டுமானால், "இயல்புடைய மூவர்க்கும்" என்பதில் உள்ள "இயல்புடைய" என்னும் சொற்றொடர் ஒன்றேபோதுமே! சுற்றம் ஓம்புதலாவது :- பல வேலைகளின் நிமித்தம் வெளியூரிலிருந்து வந்து போகும் சுற்றத்தார்க்கு உணவு முதலியன உதவுதல், ஆதரவற்ற சுற்றத்தார்களைத் தம்மோடு வைத்து ஆதரித்தல், அன்னோரின் பிள்ளைகட்குக் கல்வி வசதிசெய்தல், அன்னோர்க்கு ஏதேனும் வருவாய்க்கு வழி தேடித்தருதல் முதலியனவாம். இவ்வுதவிகளையெல்லாம் இல்லறத்தான் இயன்றவரை இயற்றலாமே!

ஐந்தாவதாக (தான்) இல்லறத்தான் தன்னையும் ஓம்பவேண்டும் என்று தெரிவித்துள்ளார் திருவள்ளுவர். இஃது சிலர்க்கு வியப்பையும் அளிக்கலாம். அப்படியொன்றும் இங்கு வியப்பிற்கு இடமில்லை. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் பாதுகாத்துக் கேடுகெட்ட மானிடர்கள் எத்துணையோ பேர் உண்டு. இல்லாதவனைப் பற்றி இங்கு எடுத்துரைக்கவில்லை. சிலர் அரும்பாடுபட்டுச் செல்வத்தைக் குவித்து வைத்திருப்பார்கள். ஆனால், நல்ல உணவினையோ, உடையினையோ, உறக்கத்தினையோ, உறையுளையோ (இடம்), இன்ன பிற இன்பங்களையோ வேண்டிய அளவு பெற்றிருக்க மாட்டார்கள். என்னே இவர்தம் இரங்கத்தக்க நிலை! தன்னைப் பாதுகாத்துக் கொண்டால்தான், மேன்மேலும் பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும். எனவே, மேற்கூறிய ஐந்தும் இல்வாழ்வான் இயற்ற வேண்டியவை என்பது இக்குறட் கருத்து.

*(ஆராய்ச்சி உரை)* தென்புலத்தார் என்பதற்கு, முதல் முதல் உலகத்தை உண்டாக்கியபோதே நான்முகனால் (பிரமனால்) உண்டாக்கப்பட்ட ஒரு தெய்வசாதி என்று பரிமேலழகர் பகர்ந்தனர் உரை. ஏன் - இவர்களை, தெய்வம் என்பதற்கு அவர் கூறும் பொருளான தேவர்க்குள் அடக்கிவிடலாமே! தென்திசையில் இருக்கும் இத்தெய்வ சாதியார்கள் நமக்காக என்ன செய்கின்றார்களோ? நாம் இவர்களுக்கு என்ன செய்யவேண்டுமோ? ஒன்றும் புரியவில்லை. ஏனைய தெய்வங்களைப்போலவே இவர்களும் அருள்புரிகின்றார்கள் என்றால், இவர்களையும் தெய்வக்கூட்டத்துள் சேர்த்துவிடுவதால் என்ன இடையூறு? எனவே, இப்பொருள் பொருத்தம் அன்று.

மேலும், இப்பொருள் உரைத்தால், யாம் உரைத்தபடி முன்னோரின் நினைவு விழாவிற்கு இடமில்லாமலேயே போய்விடும். இறந்துபோன வீரர் முதலியவர்களுக்கு விழாக்கொண்டாட வேண்டாமா? கொண்டாடியதாகக் கூறுகின்றனவே சங்ககால இலக்கண இலக்கியங்கள்! வீரமங்கை கண்ணகிக்கு விழாக் கொண்டாடினானே ஒரு தனித்தமிழ் மன்னனாம் சேரன் செங்குட்டுவன்.

சிலப்பதிகாரத்திற்குள் சென்று பார்த்தால் தெரியும். எனவே, தென்புலத்தார் என்பதற்கு, சிறந்த செயல்கள் செய்து சென்றுபட்ட முன்னோர் எனப் பொருள் கூறலே சாலப் பொருந்தும்.

*4. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.*

*(பதவுரை)* வாழ்க்கை - (ஒருவனுடைய) இல்வாழ்க்கையானது, பழி அஞ்சி - (பொருள் தேடுதல் முதலியவற்றில் உண்டாகும்) பழிக்கு அச்சப்பட்டு, பாத்து - (அப்படி நல்லவழியில் வந்த செல்வப்பயனைப் பலர்க்கும்) பகுத்துக் கொடுத்து, ஊண் - (தானும்) உண்ணுதலை, உடைத்தாயின் - உடையதாக இருக்குமேயானால், வழி - (அந்நல்வாழ்க்கையின்) தொடர்ச்சி, எஞ்சல் -அற்றுப்போதல், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், இல்-இல்லை.

இனிமுறையே மணக்குடவர் உரையும், பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* இல்வாழ்க்கையாகிய நிலை பழியையும் அஞ்சிப் பகுத்துண்டலையும் உடைத்தாயின், தனதொழுங்கு இடையறுதல் எக்காலத்தினும் இல்லை.

*(பரி-உரை)* பொருள் செய்யுங்கால் பாவத்தை அஞ்சி ஈட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், அவன் வழி உலகத்து எஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தல் இல்லை.

*(தெளிவுரை)* கெட்ட வழியில் பணம் தேடினால் உலகம் பழிக்கும் என்று அஞ்சி, நல்ல வழியில் தேடி, அதனைப் பலர்க்கும் பகுத்துக்கொடுத்து உண்பவனுடைய வாழ்க்கை தொடர்ந்து நல்ல விதமாக நடக்கும் என்பது வள்ளுவரின் வாய்மொழி. இஃது என்னே விந்தை! உலக நடை ஒன்றும் திருவள்ளுவர்க்குத் தெரியாது போலும்! என்று வியக்கலாம் சிலர். ஏன்?

கெட்டவழியில் பொருள் தேடாவிட்டால் பலர்க்கும் பகுத்துக்கொடுக்கும் அளவு பொருள் சேர்வது எப்படி? நல்ல வழியில் பொருள் தேடும் நல்லோர் சிலர், தம்மையே நன்கு பாதுகாத்துக்கொள்ள முடியாமல் தவிக்கின்றார்களே! அவர்கள் பலர்க்கும் பகுத்துக்கொடுப்பது எப்படி? செல்வம் சேர்ந்திருந்தாலும், பலர்க்கும் பகுத்துக்கொடுத்துக் கொண்டேயிருந்தால் அக்குடும்பம் விரைவில் நொடித்துவிடாதா? பின்பு இடையறாமல் எப்போதும் விளங்குவது எப்படி? என்பவற்றையெல்லாம் எண்ணும்போது இக்குறளில் நம்பிக்கை தோன்றாது தானே! இதனைச் சிறிது ஆராய்வோம்.

திருவள்ளுவர் இந்தக் குறளில் தெரிவித்திருப்பது என்ன? நல்ல வழியில் பொருள் ஈட்டவேண்டும்; அப்பொருளை, (பெற்றோர், பெண்டாட்டி, பிள்ளை, துறந்தார், துவ்வாதவர், இறந்தார், தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றத்தார், தான் என்னும்) பலர்க்கும் பயன்படுத்தி வாழவேண்டும் என்பதுதானே! இல்வாழ்வான் தன்னையும், தன் பெற்றோர், மனைவி, மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்றும் திருவள்ளுவர் கூறியிருப்பதால், ஒருவன் தன் செல்வம் முழுவதையும் பிறர்க்கே செலவிட்டுத் தன் குடும்பத்தை அழித்துவிட வேண்டும் என்பதன்று. போதுமான அளவு தன் குடும்பத்தையும் காப்பாற்றி, இயன்றவரை ஏனையோரையும் ஆதரிக்க வேண்டும் என்பது இனிது புலப்படுகின்றதல்லவா? எனவே, பிறர்க்கு ஓரளவு உதவுவதால் தன் குடும்பம் நொடித்துவிடும் என்பதற்கு இடமில்லை. பலர்க்கும் உதவிப் பலருடைய நன்மதிப்பையும் பெறுவதால், தப்பித்தவறித் தன் குடும்பத்திற்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் அப்பலரும் உதவுவர். பலருள் சிலர்கூடவா நன்றி பாராட்டமாட்டார்கள்? பிறர்க்கு உதவாதவனுடைய குடும்பத்திற்கு ஒரு துன்பம் ஏற்பட்டால், அதிலும் அவன் கெட்டவழியில் பொருள் ஈட்டியிருப்பானேயானால் அவன் குடும்பத்தை அனைவரும் வெறுத்து ஒதுக்குவார்கள்.

மேலும், கெட்ட வழியில் மிக்க பொருள் திரட்டி வாழ்வது வெள்ளத்தை நம்பி வாழ்வது போலாகும். வெள்ளம் எப்போதும்

வருமா? ஆனால், நல்ல வழியில் பொருள் ஈட்டி வாழ்வதோ, ஊற்றுநீரை நம்பி வாழ்வது போலாகும். ஊற்று எப்போதும் சுரக்குமன்றோ? எனவே, நல்வழியில் பொருளீட்டி, நாலாபேர்க்கும் உதவி வாழ்வானுடைய குடும்பம் தொடர்ந்து விளக்கம் பெறும் என்னும் இக்குறட் கருத்து இப்போது ஏற்புடையதாய்த் தோன்றுமே!

*(ஆராய்ச்சி உரை)* சிலர் இன்னொருவருடைய பொருளை எடுத்துத் தம்முடையது போல வழங்குவார்கள். 'கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைப்பது' என்றால் இதுதான்? இன்னும் சிலர், பிறரை வருத்திப் படாதபாடு படுத்தி அவரிடம் உள்ள பொருளைப் பறித்து, நல்லவர்போலத் தாங்கள் வழங்குவார்கள். "மாட்டைக் கொன்று செருப்புத்தானம் செய்வது" என்றால் இதுவேதான். இவ்விதம் பழிப்புக்கிடமான முறையில் பொருள் தேடிச் செய்பவை யெல்லாம் உண்மையான உதவியாகா. ஆனால், பிறருடைய பொருளைக் கையாண்டு பலர்க்கும் பயன்படவும் செய்யலாம். அப்படிச் செய்யும்போது, பொருளுக்கு உரியவரின் வாழ்க்கைக்கு ஒரு தீங்கும் ஏற்படாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அஃதாவது, அன்னாரின் தேவைக்கு மேற்பட்ட பகுதியையே பலர்க்கும் பயன்படுத்த வேண்டும். அதனால் தப்பில்லை. ஒரு பொய் ஒருவர்க்கும் தீமை செய்யாமல், பலர்க்கு நன்மை செய்யுமேயானால் அப்பொய்யும் மெய்யேயாம் என்னும் கருத்தில், "பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த - நன்மை பயக்கும் எனின்" என்று ஒரு குறள் பின்னோரிடத்தில் உளதன்றோ?

## *5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.*

*(பதவுரை)* இல்வாழ்க்கை - (ஒருவனுடைய) இல்லற வாழ்க்கையானது, அன்பும் - (யாவரிடத்தும்) அன்பினையும், அறமும் - அறச்செயலினையும், உடைத்தாயின் - உடையதாய் இருக்குமே யானால், பண்பும் - (அவ்வில்வாழ்க்கையின்) இலக்கணமும், பயனும்

-நன்மையும், அது - (அந்த அன்பும் அறமும் உடைத்தா யிருக்கின்ற) அச்செயலே.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* இல்வாழ்க்கையாகிய நிலை யாவர் மாட்டும் அன்பு செய்தலையும், அறம் செய்தலையும் உடைத்தாயின் அதற்குக் குணமாவதும் பயனாவதும் அவ்விரண்டினையும் உடைமைதானே.

*(பரி.உரை)* ஒருவன் இல்வாழ்க்கை, தன் துணைவிமேல் செய்யத்தகும் அன்பினையும், பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடைத்தாயின் அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனும் ஆம். இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சு ஒன்றாகா வழி இல்லறம் கடைபோகாமையின் (நடவாமையின்) அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பயனாயிற்று.

*(தெளிவுரை)* பண்பு என்றால் இலக்கணம்; அஃதாவது தன்மை. இல்வாழ்க்கைக்கு இருக்கவேண்டிய இலக்கணம் அன்பும், அறமும் உடைமையே. இல்வாழ்க்கையின் பலனும் அந்த அன்பும் அறமும் உடையதாய் இருப்பதே. அன்பும், அறமும் இல்லாதவன் இனிமையாக இல்வாழ்க்கையை எப்படி நடத்த முடியும்? முடியாது. அதனாலேயே அவ்விரண்டும் உடைமை இல்வாழ்க்கையின் இலக்கணம் என்றார். யாவரிடமும் அன்பு காட்டுவதும், அறம் செய்வதுமே இல்வாழ்க்கையின் நோக்கம் ஆதலால், அவ்விரண்டும் உடைமை இல்வாழ்க்கையின் பலனும் ஆகும் என்றார்.

இஃதென்ன! ஒன்றையே இலக்கணமாகவும், பலனாகவும் கூறித் தியங்கச் செய்துள்ளாரே திருவள்ளுவர் என்று திகைக்கலாம் சிலர். இத்தியக்கத்தாலேயே பரிமேலழகர் வேறுவிதமாக உரை பகர்வாராயினர். கூர்த்து நோக்கின், இங்குத் திகைப்பிற்கே இடம் இல்லை. எடுத்துக்காட்டு ஒன்று தருவோம்.

பிள்ளையின் இலக்கணம் பெற்றோரைக் காப்பாற்றுதலும், உலகிற்குத் தொண்டு செய்தலும் ஆகும் என்று ஒருவர் கூறுவதாக வைத்துக்கொள்வோம். அவ்விரண்டுந்தானே பிள்ளையினால்

உண்டாகும் பயனுங்கூட. எனவே, ஒன்றையே இலக்கணமாகவும், பயனாகவும் திருவள்ளுவர் குறிப்பிட்டிருப்பதைக் குறித்துத் தியங்க வேண்டாமன்றோ?

*(ஆராய்ச்சி உரை)* அன்பு என்பதற்கு மனைவிமேல் உள்ள அன்பு என்று பகர்ந்துள்ளார் பரிமேலழகர். இங்கே வள்ளுவர் காதல் என்னும் சொல்லை வைத்திருந்தால் பரிமேலழகர் பகரலாம் அவ்விதம். ஆகவே, அன்பு என்பதற்கு யாவரிடத்தும் உள்ள அன்பு என்று பொருள் கூறினால், அவ்வில்வாழ்வானுக்கும் பெருமை, திருவள்ளுவர்க்கும் பெருமை! எல்லோரிடத்திலும் அன்பு உள்ளவன் தன் மனைவியிடத்திலா அன்பு இல்லாதவனாகப் போய்விடுவான். பரிமேலழகர் கூறியபடியே வைத்துக்கொண்டாலும் தம் மனைவியின் மேல் அளவு மீறி அன்புகொண்ட சிலர், பிறரை நோகச்செய்கின்றனரே! பிறரை என்ன? பெற்றோரையே பேதுற (மயங்கச்) செய்கின்றனரே! இதுதானா இல்வாழ்க்கையின் இலக்கணம்?

மேலும், பரிமேலழகர், அன்பை இல்வாழ்க்கையின் இலக்கணமாகவும், அறத்தைப் பலனாகவும் பகர்ந்துள்ளார். இங்குக் கூர்ந்து நோக்கவேண்டும். "பண்பும் பயனும் அது" என்பது குறள். "அது" என்னும் ஒருமை அன்பையும் அறத்தையும் உடைத்தாயிருக்கும் செயலைக் குறிக்கின்றது. எனவே, பண்பும் அச்செயல்தான், பலனும் அச்செயல்தான். பரிமேலழகர் உரைப்படி இரண்டையும் தனித்தனியாகப் பிரித்துக் கூறும் நோக்கம் வள்ளுவர்க்கு இருந்திருக்குமேயானால், "பண்பும் பயனும் அவை" என்று பாடியிருப்பார். அன்பு இலக்கணமாகும்போது, அறம் மட்டும் இலக்கணம் ஆகாதா? அறம் பயனாகும்போது, அன்பு மட்டும் பயனாகாதா? ஆகுமே!

## *6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவ தெவன்.*

*(பதவுரை)* அறத்தாற்றின் - அறவழியிலே, இல்வாழ்க்கை ஆற்றின் - (ஒருவன்) இல்லறத்தை நடத்துவானேயாயின், புறத்தாற்றில் - அறவழிக்குப் புறவழியான மறவழியில் அதாவது தீயவழியில்,

போஒய்ப் பெறுவது - சென்று பெறக்கூடிய நன்மை, எவன் - என்ன? (ஒன்றுமில்லை)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* இல்வாழ்க்கையாகிய நிலையை அறநெறியிலே செலுத்தவல்லவனாயின், புறநெறியாகிய தவத்தில் போய்ப் பெறுவது யாதோ?

*(பரி.உரை)* ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனாயின், அவன் அதற்குப் புறமாகிய நெறியில் போய்ப் 'பெறும் பயன் யாது? புறத்தாறு - இல்லைவிட்டு வனத்துச் செல்லு நிலை.

*(தெளிவுரை)* அற ஆறு - அறத்தாறு; புறஆறு- புறத்தாறு. அறத்துக்குப் புறம் அதாவது புறம்பு மறம் அதாவது தீமை. ஆறு - வழி, நெறி. "போய்" என்பதுதான் "போஒய்" என்றாயிற்று. எவன், என்ன, என் என்னுஞ் சொற்கள் ஒரே பொருள் உடையவை. எவன் என்பது பழைய வழக்கு.

உலகில் சிலரது குடும்ப வாழ்க்கை செம்மையுற நடத்தலைக் காண்கின்றோம். அந்தக் குடும்பத்தாரிடைக் குறையொன்றுங் கூறவியலாது. கணவன் மனைவி ஒற்றுமை, பெற்றோர் பிள்ளை ஒற்றுமை, விருந்தோம்பல், சுற்றம் தழுவல், பிறர்மனை நயவாமை, கள்-களவு-பொய்-சூது முதலியன இன்மை, இன்பத்தில் துள்ளாமை, துன்பத்தில் கலங்காமை முதலிய பண்புகளுடன் வாழ்தல் தான் "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றுதல்" என்பது. இதற்கு எதிர்மாறான வாழ்க்கை "புறத்தாற்றில் போகும் இல்வாழ்க்கை"யாகும். பெரும்பான்மையோர்க்கு அறத்தாற்று இல்வாழ்க்கையில் இன்பமோ, பெருமையோ, விறுவிறுப்போ இருப்பதாகத் தெரியவில்லை; அன்னோர்க்குப் புறத்தாற்று இல்வாழ்க்கையிலேயே பூரிப்புப் பொங்குகிறது; இன்பங் கொழுந்து விடுகிறது; விறுவிறுப்பு முறுக்கேறுகிறது. ஆனால், புறத்தாற்று இல்வாழ்க்கை முதலில்

முன்னேற்றமாய்த் தென்படினும் பின்னர்க் கவிழ்த்துவிடும்; ஆதலின் அறத்தாறே என்றும் நின்று நிலைத்து நீடிக்கும் என எச்சரிக்கின்றது இந்தக் குறள்.

*(ஆராய்ச்சி உரை)* இந்தக் குறளில் அறத்தாறு புறத்தாறு என இரண்டு நெறிகள் பேசப்பட்டுள்ளன. அறநெறிக்குப் புறநெறி (எதிர்மாறான நெறி) மறநெறி (தீயவழிகள்) என இயற்கையாய்ச் சொல்லமைப்பு - தொடர் அமைப்புகளை ஒட்டி யான் உரை எழுதினேன். ஆனால், பழைய உரையாசிரியர்கள், இங்கே எனக்கு மேல் பெரும் புரட்சிப் பொருள் புகன்றுள்ளனர். அவர்தம் துணிவைப் பாராட்டுகிறேன். புறத்தாறு என்பதற்கு, இல்லற வாழ்க்கைக்குப் புறம்பான துறவற வாழ்க்கை - தவவாழ்க்கை என அவர்கள் பொருள் எழுதியுள்ளனர். நல்லமுறையில் இல்வாழ்க்கை நடத்தினால், துறவறத்திற்குச் சென்றுதான் தீரவேண்டும் என்பது கட்டாயம் இல்லை; துறவறத்திற்குச் சென்று பெறக்கூடிய நன்மைகளையெல்லாம் இவ்வில்லறத்திலேயே பெறலாம் என்பது அவர்தம் கருத்து. உண்மைதானே!

உள்ளத்தில் ஒழுங்கு இல்லாமல், முற்றத் துறந்த முனிவரெனச் சொல்லிக்கொண்டு, காட்டில் திரிந்துதான் என்ன பயன்? காற்றை உண்டுதான் என்ன பயன்? கந்தலைக் கட்டி ஓட்டைச் சுமந்து இரந்து உண்டுதான் என்ன பயன்? ஒன்றும் இல்லை. எல்லாம் வெளிப்பகட்டே! ஆனால், பெண்ணுடன் வீட்டிலே யிருந்து சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும், உள்ளத்தில் ஒழுங்கு உடையவர்கள் பேரின்பத்தையும் பெறுவார்கள். இதனை முற்றத் துறந்த முனிவரும் நுகர்ந்து கண்டவரும் (அனுபவசாலியும்) ஆகிய பட்டினத்தாரே பகர்ந்துள்ளார்:

*"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி*
*ஓடே எடுத்தென்ன உள்ளன்பு இலாதவர் ஓங்கு விண்ணோர்*
*நாடேய் இடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்*
*வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே"*

என்பது பட்டினத்தடிகளின் பாடல். (நாரியர்-பெண்டிர்) பெண்ணுடன்

இருப்பவர்கள் வீட்டுலகப் பேரின்பத்தையும் பெறுவார்கள் எனில், இவ்வுலக இன்பங்கள் எல்லாவற்றையுங்கூட எய்த முடியும் என்பதில் எள்ளளவு ஐயமும் இல்லையன்றோ? இன்னும் இப்பாடலுக்கு, வீட்டுலகம் (மோட்சம்) சென்று பெறும் பேரின்பத்தை, இவ்வுலகிலேயே இல்லறத்தில் மனைவியுடன் இருந்து வாழ்ந்துகொண்டே பெற்று விடலாம் என்றும் பொருள் உரைத்துக் கொள்ளலாம். இந்தப் பாடலுக்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால் திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறே போதுமே!

எனவே, பழைய உரையாசிரியர்கள் கூறியுள்ள இந்தப் புரட்சியான கருத்து நன்றாய்த்தான் உள்ளது. வள்ளுவரே பின்வரப்போகும் ஒரு குறளில் இந்தப் புரட்சியைக் கையாண்டுள்ளார். அந்தப் புரட்சியின் அனல் இங்கேயும் வீச, உரையாசிரியர்கள் இங்கேயே குளிர்காயத் தொடங்கிவிட்டனர். ஆயினும், இந்தப் பொருளுக்கு இந்தக் குறள் அமைப்பு இடம்தரவில்லை என்றே உணர்கிறேன். அறத்தாறு என்று சொல்லி, பின் புறத்தாறு என்றால், அது அறநெறிக்குப் புறம்பான மறநெறிதான். புறவாழ்க்கை என்று சொல்லியிருப்பின், இல்வாழ்க்கைக்குப் புறம்பான துறவு வாழ்க்கை எனப் பொருள் கொள்ளலாம். அவ்வாறு இல்லையாதலின், பழைய உரை பொருந்தாது என்பது இப்போது புரிகிறது. "பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு" என்னும் கொள்கையைப் பின்பற்றி யான் இக்குறளுக்கு உரை எழுதியிருக்கும் நுணுக்கத்தை இலக்கணம் கற்றோர் உணர்வர். தீயன கண்டிப்பதற்கும் இடம் இது.

இந்தக் குறளில் "போஒய்" என ஒரு சொல் உள்ளது. இதன் உண்மையான உருவம் "போய்" என்பதுதான். இதன் நடுவே "ஒ"என்னும் ஓர் எழுத்து சேர்ந்துள்ளது. இந்த எழுத்துக்கும் இங்கே தனி ஒலி இல்லை. "போ" என்பதை நீட்டிச் சொல்லும்போதே "ஒ" என்பதற்கும் சேர்த்து நீட்டிவிட வேண்டும். "போ-ஒய்" எனப் பிரித்துப் படிக்காமல், "போஒய்" என ஒரே நீட்டாய் நீட்டிச் சொல்லிவிடவேண்டும்.

"போ" என்பதில் உள்ள (ப்+ஓ) உயிர் எழுத்தின் அளவை மிகுதியாக எடுத்து ஒலிப்பதற்கு அறிகுறியாக "ஒ" என்பது சேர்க்கப்பட்டது. ஆதலின், இதனை இலக்கணத்தில் "உயிர்அளபெடை" என்பர். இங்கே இந்த உயிர் அளபெடை இடம் அடைப்பதற்காகக் கையாளப்பட்டது - என்பது இலக்கண நூலாரின் கருத்து. இதை நான் ஒத்துக் கொள்வதில்லை. இடம் அடைப்பதற்கு வள்ளுவர்க்கு வேறு சொல் கிடைக்காதா? எனவே, ஒரு பொருள் கருதியே வள்ளுவர் இங்ஙனம் அமைத்துள்ளார். அதாவது, அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றாதவர்களை நோக்கி, நீங்கள் புறத்தாற்றில் "போஒய்" கிழிப்பது என்ன? என்று நீட்டி நெளித்து இளித்துக் காட்டி ஏளனம் செய்கிறார். இந்த 'ஒ' என்னும் ஓர் எழுத்தை இடையில் புகுத்தி அளவை மிகுதியாக எடுத்ததில் இத்துணைப் பொருட்சுவை பொதிந்து கிடப்பதை நுனித்துணர்ந்து மகிழ்க.

### *7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாந் தலை*

*(பதவுரை)* இயல்பினான் - இயல்பான ஒழுக்கமுறையுடன், இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் - குடும்ப வாழ்க்கை நடத்துபவன் என்று புகழ்ந்து பேசப்படுபவன், முயல்வாருள் எல்லாம் தலை - (வேறு நன்மை பெற முயல்பவர்களுக்குள் எல்லாம் முதன்மையானவன் ஆவான், (இயல்பினான் என்பதின் இறுதியிலுள்ள "ஆன்" மூன்றாம் வேற்றுமை உருபு.)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண. உரை)* நெறியினானே யில்வாழ்க்கை வாழ்பவ னென்பான், முயல்வா ரெல்லாரினுந் தலையாவான். முயறல் - பொருட்கு முயறல்.

*(பரி. உரை)* இல்வாழ்க்கையினின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான், புலன்களைவிட முயல்வா ரெல்லாருள்ளும் மிக்கவன்.

*(தெளிவுரை)* மக்கள் எல்லோரும் தாம் இன்பம் பெறுவதற்காகவே முயற்சி செய்கின்றார்கள். அம்முயற்சி பலவகையில் செல்லுகின்றது. அன்னோர்க்குள் ஒழுங்காக இல்லறம் நடாத்துபவனே சிறந்தவன். நல்ல முறையில் குடும்பம் செய்பவனுக்குப் பசி, பகை, பிணி முதலிய துன்பங்கள் இன்றி, எல்லா இன்பங்களும் இயையும் ஆதலின் அவன் சிறந்தோன் ஆவான்.

*(ஆராய்ச்சி உரை)* இக்குறளில் உள்ள "இல்வாழ்க்கை வாழ்பவன்" என்னும் தொடர் ஓர் அரிய அணுத்தொடர் ஆகும். இத்தொடரில் இரண்டு முறை வாழ்(தல்) என்னும் சொல் வந்துள்ளது. இதற்கு வள்ளுவர் அகராதியில் என்ன பொருள்? கணவனும் மனைவியுமாய் இல்லில் இயைந்து வாழ்தலையே வாழ்தல் என வள்ளுவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது. இல்வாழ்க்கையே வாழ்க்கையாக அவர்க்குப் புலப்பட்டிருக்கிறது. மற்ற வாழ்க்கையெல்லாம், "வாழாது வாழ்கின்றேன்" என ஒரு காரணம் பற்றி ஓரிடத்தில் மணிவாசகர் கூறியிருப்பது போல, வாழாத வாழ்க்கையே போலும்! வள்ளுவர் "வாழ்க்கைத் துணைநலம்" என்னும் பகுதியில், மனைவியை "வாழ்க்கைத்துணை" எனக் கூறுகிறார். அங்ஙனமெனில், 'வாழ்க்கை என்பது எது? என நாமே உய்த்துணர்ந்து கொள்ளலாமே. இல்வாழ்க்கையே வாழும் வாழ்க்கை என்னும் கருத்தை உள்ளடக்கியே "இல்வாழ்க்கை வாழ்பவன்" என இக்குறளில் ஆசிரியர் கூறினார். (வாழ்க்கையை வாழ்தல்-அதாவது வாழும் வாழ்க்கை).

இத்தொடரில் இன்னும் ஒரு நயங் காணலாம். "எங்கள் அகத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்" என்பது போல இல்வாழ்க்கையில் உள்ள எல்லோருமே வாழ்ந்தவராகி விடுவார்களா? இல்லறமென்னும் நல்லறத்தைப் புல்லறமாக்கிக் கொண்டவர்கள் எத்துணையோ பேர்! "கலியாணம் பண்ணியும் பிரமச்சாரி" என்றபடி, பேருக்குத் திருமணம் செய்துகொண்டு பேதுறுகின்ற பேதைப்பித்தர்கள் எத்துணையோ பேர்! இவர்களெல்லாம் இல்வாழ்க்கை வாழ்பவராக

மாட்டார்கள். இல்வாழ்க்கை வாழவேண்டிய இயல்பின்படி வாழ்பவரே வாழ்வாராவர் என்ற கருத்தையும் அடியொற்றித்தான் "இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்" என்றார் வள்ளுவப் பெருமானார்.

இல்வாழ்க்கை வாழவேண்டிய "இயல்பு" என்பது என்ன? இயல்பு என்பதற்கு, இயற்கை, தன்மை, உண்மை, ஒழுக்கம், நேர்மை, முறை என்றெல்லாம் பல பொருள் உண்டு. போதிய அளவு உழைத்து, உண்டு, உடுத்து, நுகர்ந்து, உறங்கி, பிறருக்கும் உதவி வாழும் வாழ்வு இயல்பான வாழ்வுதான். இக்காலத்தில் பலரிடம் செயற்கையான போலி வாழ்வே காணப்படுகின்றதன்றோ? எண்ணத்திலும் பேச்சிலும் செயலிலும் இயல்பான உண்மையின்றி, செயற்கையில் உண்மைபோல் நடிக்கின்ற போலித்தனமே காணப்படுகின்றதல்லவா? இது கூடாது. செயற்கையான போலித்தனமின்றி, இயல்பான ஒழுங்கு முறையுடன் இல்வாழ்க்கை வாழ்பவன், வேறு துறைகளில் முயல்பவர்களுக்கெல்லாம் தலைமையானவன் ஆவான் என்பதே இக்குறட்கருத்து.

இக்குறளில் உள்ள "முயல்வார்" என்பதற்கு, உலகியல் பொருளியல் துறையில் முயலுபவர் என்னும் கருத்தில் மணக்குடவரும் தவநெறியில் முயலுபவர் என்னும் கருத்தில் பரிமேலழகர் போன்றோரும் பொருள் கூறியுள்ளனர். இயல்பான இல்வாழ்க்கை யல்லாத வேறு துறைகளில் முயல்பவர் என்று நாம் பொருள் எடுத்துக்கொள்ளலாமே.

உலகில் எந்த உயிர்ப்பொருளை எடுத்துக்கொண்டாலும் ஆணும் பெண்ணுமா யிருப்பதையும், இவ்விரண்டின் சேர்க்கையாலேயே தோற்றம் ஏற்படுவதையும் நாம் கண்டு வருகின்றோம். எனவே, இயற்கைப் படைப்பின் அமைப்பு நோக்கம், ஈரினமும் இயல்பாய் இணைந்து வாழ்தலே?, இவ்வாறு அமையாத வாழ்வெல்லாம் அரைக்கிணறு தாண்டும் அரைகுறை வாழ்வே! மனைவி மக்களுடன் வாழ்ந்தறியாதவன், பெரிய பணக்காரனாய் அல்லது பெரிய படிப்பாளியாய் அல்லது பெரிய துறவியாய் நூறாண்டு

வாழ்ந்திருந்தாலும் அவனது வாழ்வு பதினெட்டு வயதுப் பையனது வாழ்வேயாகும். சாவு-வாழ்வுக் காரியங்களில் சமூகம் அவனுக்கு முதன்மை கொடுப்பதில்லை. நல்ல பிள்ளை குட்டி பெற்ற நரைத்த தலைகளையே நாடுவர் மக்கள், அவர்களுக்குத்தான் மனிதவாழ்வின் முழுப் பூட்டுத்திறப்பும் தெரியும். அவர்களே - அவர்தம் அறிவுரைகளே மற்றவர்க்கு வழிகாட்டியாகும். எனவேதான், இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன், அங்ஙனம் வாழாது வேறு வழியில் வாழ முயலுகின்ற மற்றவர்க்கெல்லாம் தலைமை தாங்குகிறான். இப்போது புரிந்திருக்குமே இக்குறளின் உட்கிடை!

*8. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை யுடைத்து.*

*(பதவுரை)* ஆற்றின் ஒழுக்கி - (ஓர் இல்லறத்தான் தன் மனைவி, மக்கள், துறவிகள் முதலானோரையும்) நல்ல வழியில் நடக்கச் செய்து, அறன் இழுக்கா - (தானும்) நல்லறத்தில் இருந்து தவறாமல் நடத்துகின்ற, இல்வாழ்க்கை-இல்வாழ்க்கையானது, நோற்பாரின் - தவஞ்செய்வாரைக் காட்டிலும், நோன்மை உடைத்து (வலிய) தவத்தன்மை உடையதாகும்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* பிறரையும் நன்னெறியிலே ஒழுகப்பண்ணித் தானும் அறத்தின்பால் ஒழுகும் இல்வாழ்க்கை தவம் செய்வாரினும் வலியுடைத்து.

*(பரி-உரை)* தவம் செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப்பண்ணித் தானும் தன்னறத்தில் தவறாத இல்வாழ்க்கை, அத்தவம் செய்வார் நிலையினும் பொறையுடைத்து.

*(தெளிவுரை)* பிறரையும் நல்வழியில் நடக்கச் செய்து தானும் அறம் தவறாது நடத்தும் இல்வாழ்க்கை, தவஞ்செய்வார் வலிமையினும் மிக்க தவவலிமை உடையதாம்.

*(ஆராய்ச்சி உரை)* ஒழுகுதல் தன்வினை - அஃதாவது தான் நடத்தல். ஒழுக்குதல் பிறவினை - அஃதாவது பிறரை நடக்கச் செய்தல். இங்கே ஒழுக்கி எனப் பிறவினையாகக் கூறியிருத்தலின், "மனைவி, மக்கள், துறவிகள் முதலானோரை நல்ல வழியில் நடக்கச் செய்து" என்று பொருள் கூறவேண்டியதாயிற்று. இழுக்காத என்பதில் உள்ள த கெட்டது. இதுதான் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இல்வாழ்க்கை நோன்மை உடையது என்றால், இல்வாழ்வான் நோன்மை உடையவன் என்று கொள்ளவேண்டும்.

நோன்மை என்பதற்குத் தவம், வலிமை, பொறை முதலிய பொருள்கள் உண்டு. இங்கே சில உரையாசிரியர்கள் வலிமை எனப் பொருள் உரைத்துள்ளனர். சிலர் பொறை எனப் பொருள் புகன்றுள்ளனர். தவம் எனப் பொருள் உரைத்தாம் யாம். ஏன்? தவம் என்றால் ஏதோ தனிப்பட்டது என்று எவரும் தயங்க வேண்டாம்; ஒழுங்கானமுறையில் இல்வாழ்க்கை நடத்துவதும் ஒரு தவமே. மேலும், இவ்வில்லறத் தவம் துறவிகளின் தவத்தைக் காட்டிலும் வலியதும், சிறந்ததும் ஆகும் என்பது எமது கருத்து.

இல்லறத்துறவு என்றால் வேறு எதுவும் இல்லை; பொழுது விடிந்து பொழுது போகும் வரையும் தம் மனைவி மக்களை மட்டுமே கட்டியழுதுகொண்டு - அவர்கட்கு வேண்டியவற்றை மட்டுமே தேடி உழன்றுகொண்டு கிடக்காமல், மற்ற மன்பதைக்கும் (சமுதாயத்துக்கும்) தொண்டாற்றுதலே இல்லறத் துறவு. இத்தகைய தொண்டு புரிவோரே "இல்லறத்துறவிகள்" என்பது கருத்து.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்" என மற்றொரு குறளில் கூறியுள்ளபடி, தான் மட்டுமே தனியே அமர்ந்து "மூக்கு விழிகளை" மூடிக்கொண்டு செய்யும் துறவுத் தவத்தைவிட, மனைவி மக்களுடன் மக்கள் சமுதாயத்துக்கும் தொண்டாற்றும் இல்லறத்தவம் எவ்வளவோ சிறந்ததுதானே! இது குறித்தே, "இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மையுடைத்து" என்றார் வள்ளுவர். ஆனால், "எல்லோரையும் ஆற்றின் ஒழுக்கித் தானும் அறனிழுக்காது நடத்துகின்ற

இல்வாழ்க்கையே நோற்பாரின் நோன்மையுடைத்து" என்பதும் ஈண்டு நினைவிருக்க வேண்டும். எனவே, இல்லறத் தவத்துக்குரிய இலக்கணம், அனைவர்க்கும் ஆகவேண்டிய உதவிகளைச் செய்து அவரவரையும் நல்ல வழியில் நடத்துதல், தானும் நல்ல வழியில் நடத்தல் என்னும் இரண்டும் உடைமை எனத் துணிக.

முன்பு - சங்க காலத்தில் பிசிராந்தையார் என்னும் புலவர் பெருமான் ஒருவர் வாழ்ந்தார். அவர் வயதால் முதிர்ந்தவர்; வடிவத்தால் இளையவர். நரை, திரை, மூப்புக்களுக்கு அவர் உடம்பில் எங்கும் இடம் கிடைக்கவில்லை. ஒரு சமயம் வெளியூர் ஒன்றுக்குச் சென்றார் அவர். அவ்வூரினர் சிலர் புலவரை நோக்கி, பெரியீர்! தங்கட்கு வயது பல நிரம்பியும் நரை தோன்றவில்லையே! காரணம் என்ன? இவ்வாற்றலை (வித்தையை) எங்கு, எவரிடம் கற்றீர்? என்று வினவினார்கள். அவர்க்குப் பின்வருமாறு பதிலீந்தார் புலவர்.

"அன்பர்களே! பல ஆண்டு ஆகியும் நரை தோன்றாத ஆற்றலை எங்குக் கற்றீர்" என்று வியப்புடன் வினவுகின்றீர்கள். இங்கு வியப்பிற்கே இடமில்லையே. யான் ஒழுங்கான இல்வாழ்க்கை உடையவன். அதனால் என் மனைவியும், மக்களும் திருந்திய நல்வாழ்க்கையினர். வேலைக்காரரும் அத்தகையோரே! பற்றுக்களைத் துறந்த சான்றோர் பலர் எம் ஊரில் உள்ளனர். இத்தகைய சுற்றுச் சூழலுடன் நல்லமுறையில் யாங்கள் வாழ்க்கை நடத்துவதால், பசி, பிணியின்றி என்றும் இளையனாய்த் திகழ்கின்றேன் யான்" என்று மொழிந்தார். இதனை அப்புலவர் பாடிய

*"யாண்டு பலஆக நரையில ஆகுதல்*
*யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்,*
*மாண்ட என் மக்களொடு மனைவியும் நிரம்பினர்,*
*யான் கண்டனையர்என் இளையரும், வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை*
*ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழும் ஊரே"*

என்னும் புறநானூற்றுப் (191) பொற்பாடலால் அறியலாம்.

இவ்வரலாற்றால் அறியக்கிடப்பது என்ன? புலவர் அனைவரையும் ஆற்றின் ஒழுக்கினார். தாமும் அறன் இழுக்காது வாழ்ந்தார். அதனால் நோற்பாரைவிட நோன்மை பெற்றார். யோகிகள் யோகவன்மையால் பெறக்கூடிய இளமையை இந்தப் போகி பெற்று வாழ்ந்ததைக் நோக்குங்கள்! மேலும், இல்வாழ்வான் உணவு, உடை முதலியன உதவினால்தான் துறவி ஆற்றின் ஒழுகமுடியும் ஆதலின், துறவிகளை ஆற்றின் ஒழுக்குபவனும் அவனே என்பதும் இங்கு நினைவுக்கு வரவேண்டும். மற்றும், துறவிகளின் துறவறத்தவத்தினும் இல்வாழ்வானின் இல்லறத்தவமே எல்லோர்க்கும் பயன்அளிக்கும். ஆதலின் அது உயர்ந்ததுதானே!

### 9. *அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*<br>*பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.*

*(பதவுரை)* அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை - அறம் அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டதெல்லாம் இல்வாழ்க்கைதான்; அஃதும் - அப்பேர்ப்பட்ட சிறப்புடைய இல்வாழ்க்கையும், பிறன் பழிப்பது இல்லாயின் - பிறன் எவனும் பழிப்பதற்கு இடமில்லாதிருக்குமானால் தான், நன்று - நல்லதாகும்- சிறந்ததாகும். (அறன் -அறம்)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; அதுவும் நன்றாவது பிறனொருவனாற் பழிக்கப் படுவதொன்றை யுடைத்தல்லவாயின். பழிக்கப்படுவதென்றது இழிகுலத்தாளாகிய மனையாளை.

*(பரி.உரை)* இருவகை யறத்தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; ஏனைத் துறவறமோவெனின், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவதில்லையாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று.

*(தெளிவுரை)* உலகில் எது எதுவோ அறம் என்று சொல்லப்படினும் உண்மையில் அறம் என்று சொல்லப்படுதற்கு உரியது இல்வாழ்க்கைதான். இல்வாழ்க்கையே சிறந்தது எனத் தேற்றப்படுத்திக் கூறிவிட்டதால், குடும்பத்தில் இருந்துகொண்டு எவ்வளவு கொடுமை வேண்டுமானாலும் செய்யலாம் என்று கொள்ளலாகாது. அந்த இல்வாழ்க்கையும் பிறனொருவன் பழிக்காதபடி இருந்தாலே சிறந்ததாம்.

*(ஆராய்ச்சி உரை)* "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்பதற்கு வாடிக்கையாக ஏதேதோ பொருள் சொல்வது வழக்கம். இல்லறம், துறவறம் என அறம் இருவகை; அவற்றுள் இல்லறமே சிறந்தது என்னுங் கருத்தில் பரிமேலழகர் எழுதியுள்ளார். இன்னும் எத்துணையோ அறங்கள் (முப்பத்திரண்டு அறங்கள்) சொல்லப் படுவதுண்டு. அவற்றுள் இல்லறமே சிறந்தது என்றெல்லாம் சொல்லுவதுண்டு. இங்கே நான் என்ன சொல்லுகிறேன்? அறமே இல்வாழ்க்கை- இல்வாழ்க்கையே அறம்; கரும்பே கன்னல் - கன்னலே கரும்பு என்பது போல. அகராதி தொகுப்பவர்கள், அறம் என்பதற்கு நேரே இல்வாழ்க்கை எனவும், இல்வாழ்க்கை என்பதற்கு நேரே அறம் எனவுங்கூட எழுதிவைக்கலாம். இதற்கு நிகண்டு போன்றதொரு சான்று, "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்பதே.

"அறன் எனப்பட்டதே" என்பதின் இறுதியிலுள்ள "ஏ" துறவறத்தினின்று இல்லறத்தைப் பிரித்துக் காட்டும் பிரிநிலை ஏகாரம் ஆகும் எனப் பொருள் கொண்டு, "அஃது" என்ற சொல்லுக்கு "அந்தத் துறவறமும்" எனப் பொருள் கூறியுள்ளார் பரிமேலழகர். ஏகாரத்தைத் தேற்ற ஏகாரமாகக் கொள்ளின் இந்தக் குழப்பத்துக்கு இடமில்லை. "அஃது" என்னும் சுட்டு எவ்வாறு துறவறத்தைக் குறிக்க முடியும்? முதலில் இல்வாழ்க்கையைக் கூறி, பின்பு அது என்று சுட்டிக்காட்டினால் எது என்று எண்ணுக.

இல்வாழ்க்கையில் இருந்துகொண்டுதான் எல்லா அறமும் செய்ய முடியுமாதலின் "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" என்றார். இல்வாழ்க்கையே அறம் எனத் தேற்றப்படுத்திக் கூறிவிட்டதால்,

குடும்பத்தில் இருந்துகொண்டு எவ்வளவு கொடுமை வேண்டுமானாலும் செய்யலாமா? பிறர் பழிக்காதபடி நடந்துகொண்டால் தானே நல்லதாகும் என்பதை அறிவிக்கவே "பிறன் பழிப்பதில்லாயின் நன்று" என்றார் ஆசிரியர். இங்கே "பழிப்பது" என்னுஞ் சொல்லுக்கு, பழித்தலுக்குரிய தாழ்ந்த குலத்து மனைவி எனப் பொருள் எழுதியுள்ள மணக்குடவருக்கு நமது கழிபேரிரக்கம் உரித்தாகுக!

*10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.*

*(பதவுரை)* வையத்துள் - மண்ணுலகத்திலே, வாழ்வாங்கு வாழ்பவன் - (இல்லறத்தில் இருந்து) வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்து வருபவன், வான் உறையும் - விண்ணுலகத்தில் அமர்ந்திருக்கின்ற, தெய்வத்துள் வைக்கப்படும் - தெய்வங்களுள் ஒருவனாக வைத்து மதிக்கப்பெறுவான். (வையம்- மண்ணுலகு; வான் -மேலுலகு)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண. உரை)* இல்வாழ்க்கை வாழும்படியிலே வாழுமவன் உலகத்திலே தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவன்.

*(பரி. உரை)* இல்லறத்தோடு கூடி வாழுமியல்பினால் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே யெனினும் வானின்கணுறையுந் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்.

*(தெளிவுரை)* உலகில் வாழவேண்டிய முறைப்படி இல்வாழ்க்கை நடத்துபவன் விண்ணில் இருக்கும் தெய்வங்களுள் ஒரு தெய்வம்போல் மதிக்கப்படுவான்.

*(ஆராய்ச்சி உரை)* இந்தக் குறளில் உலக வழக்கில் உள்ள உண்மையொன்று பொதிந்து கிடப்பதாகப் புலப்படுகின்றது. உலகில்

ஒழுங்கான முறையில் நல்வாழ்வு நடத்திப் பின்னர் இறந்து போனவரைக் குறித்துச் சுட்டி, "அவர் செத்துத் தெய்வமாகப் போய் விட்டார்" என்று மக்கள் பேசிக் கொள்வதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். நீங்களும் கேட்டிருப்பீர்கள் என்றுதான் நம்புகிறேன். நாமே பலரைப் பற்றி அவ்வாறு சொல்லியிருப்போம். ஆனால், தீயசெயல்கள் செய்து இறந்துபோன கொடியவர்களை அவ்வாறு குறிப்பிட்டுச் சொல்வது வழக்கத்திலில்லை; அவர்களை அலகையாய் அலைவதாகச் சொல்வதுதான் வழக்கம். ஆனால், நல்வாழ்வு வாழ்ந்து இறந்துபோன நல்லவரைக் குறிப்பிட்டுத்தான், "சும்மா சொல்லக்கூடாது; அவர் செத்துத் தெய்வமாய்ப் போய்விட்டாரு; அவர் எவ்வளவு பாடுபட்ட மனுழ்சன் தெரியுமா! அவர் மட்டும் இப்பொழுது இருந்திருந்தால் இது இப்படியா நடந்திருக்கும்? இந்நேரம் எவ்வளவோ மேல் நோக்கத்துக்குக் கொண்டு வந்திருப்பாரு" என்றெல்லாம் சொல்வது உலகியல். மக்களது பேச்சுவழக்கை இங்கே எழுத்துக்கு எழுத்து அப்படியே கொடுத்திருக்கிறேன். உண்மைதானே இது? இதே கருத்தைத்தான், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார் திருவள்ளுவனார்.

எனவே, தெய்வநிலை யடைவதற்குரிய நேர்ப்பாதை வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் போலும்! தெய்வங்கள் எல்லாம் இப்படிமேல் வகுப்பு மாறி வந்தவைதாமோ? நம் திருக்கோவில்களுக்குள் நுழைவோமேயாயின், தெய்வங்களின் பட்டாளங்களைப் பரவலாகப் பார்க்கலாம். அவற்றையும் கூர்ந்து நோக்கின், ஆழ்வார்களாக-அல்லது நாயன்மார்களாக இருக்கக் காணலாம். அண்மைக் காலத்தில் மனிதர்களாக இருந்து பின் தெய்வமாக மாறிய இவை எல்லாம், "ஜுனியர்" தெய்வங்கள் (பிந்தியவை) ஆகும். அவதார புருழ்சர்களாக வந்து தோன்றிய தெய்வங்கள் எல்லாம் "சீனியர்" தெய்வங்கள் (முந்தியவை) ஆகும்.

இவையன்றி, இன்னும் இக்குறளின் உண்மைக்கு ஒரு சான்று

தருவேன்:- உலகில் நல்லவரோ- கெட்டவரோ எவர் இறந்தாலும், 'சிவலோக பதவி யடைந்தார்', 'வைகுண்ட பதவி யடைந்தார்' என்றுதானே 'கருமாதிப் பத்திரிகை'யில் அச்சிடுகின்றோம். இதிலுள்ள உண்மையாது? செத்தவரைத் தெய்வமாக மதிக்கிற உண்மைதான். செத்தவருக்கு எவ்வளவு படையல்கள் - வழிபாடுகள் நடக்கின்றன தெரியுமா? செத்துப்போன கெட்டவனையும் சமூகம் மதித்துத் தெய்வமாக ஏற்றுக்கொள்ளுகிறது எனில், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று வள்ளுவர் சொல்லியிருப்பதில் என்ன தவறு? என்ன தடையிருக்க முடியும்?


தெய்வங்கள் மண்ணுலகில் நம் நடுவே வெளிப்படையாய்க் காணப்படாமையின், அவை விண்ணுலகில் எழுந்தருளியிருக்கக்கூடும் என்ற மக்களின் எண்ணத்தை எதிரொலிப்பவர்போல் "வானுறையும் தெய்வம்" என்றார் வள்ளுவர். அவன் வானத்துக்குச் சென்ற பிறகுதான் தெய்வமாவான் என்பதில்லை; வாழ்வாங்கு வாழுமவன் வையத்துள் இருக்கும்போதே கூட தெய்வமாக மதிக்கப்படுவான் என்ற குறிப்புப் பொருள் "வையத்துள் .... வைக்கப்படும்" என்பதிலிருந்து கிடைக்கின்றதல்லவா?

வாழ்வாங்கு வாழ்பவன் என்று கூறியுள்ளாரே - வாழ்வாங்கு வாழ்தல் என்றால் என்ன? இல்லறத்தான் இப்படி யிப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இத்தனை குறள்களில் கூறி வந்தாரே - இன்னும் எத்தனையோ குறள்களில் கூறப்போகிறாரே. அப்படி யப்படி யெல்லாம் நடந்து கொள்வதுதான் 'வாழ்வாங்கு வாழ்தல்' என்பது. இயற்கை நியதியின்படி இல்லறத்தில் வாழ்வதே வாழ்வாங்கு வாழ்தல்தானே! இல்வாழ்க்கையின் முற்ற முடிந்த தனிப்பெருஞ்சிறப்பு இந்தக் குறளில் கூறப்பெற்றுள்ளது.

❖ ❖ ❖

# அதிகாரச் சுருக்கம்

இல்வாழ்வான் உலகில் வாழும் எல்லோர்க்கும் துணையாவான். அவன், பிறர் பழிப்பிற்கு இடமின்றி, நல்லமுறையில் வாழ்வானேயானால், அவன் குடும்பம் தொடர்ந்து வாழும். எல்லா நன்மைகளும் கிடைக்கும். ஆதலின், அவன் ஏனையோரைக் காட்டிலும் சிறந்தவன் ஆவான். அது குறித்து, எல்லோரும் அவனைத் தெய்வமாகப் போற்றுவார்கள்.



# வாழ்க்கைத் துணைநலம்

குடும்ப வாழ்க்கையில் கணவனுக்குத் துணையாக இருக்கின்ற மனைவியின் குணநலங்களைப் பற்றிக் கூறும் பகுதியாதலின், இதற்கு வாழ்க்கைத் துணைநலம் என்னும் பெயர் வழங்கப்பட்டது. கணவனின் கடமைகளைக் கூறும் இல்வாழ்க்கை என்னும் பகுதிக்குப்பின், மனைவியின் மாண்புகளைக் கூறும் இப்பகுதியை அமைத்தது இயைபுடையதுதானே.

## 1. *மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை*

*(பதவுரை)* மனைத்தக்க மாண்புடையள் ஆகி = குடும்பத்துக்குத் தகுந்த மாட்சிமை உடையவளாய், தற்கொண்டான் = தன்னை மணந்துகொண்ட கணவனது, வளத்தக்காள் = செல்வ வளப்பத்துக்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்பவளே, வாழ்க்கைத் துணை = உண்மையில் வாழ்க்கைக்குத் துணையாவாள். (மனை - மனையறம்-குடும்பம்; மாண்பு = மாட்சிமை - நற்குண நற்செய்கைகள்; தற்கொண்டான் - தன் கொண்டான் = கணவன். வளம் = வந்துகொண்டிருக்கும் செல்வ வளம்).

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* தான் பிறந்த குடிக்குத் தக்கவொழுக்கத்தை யுடையாளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க செலவினையுடையவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள்.

*(பரி.உரை)* மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளையுடையவளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை யுடையாள் அதற்குத் துணை.

*(தெளிவுரை)* குடும்பப் பெண்ணுக்குரிய குணச்சிறப்புடன், கணவனது வருவாய்க்கேற்பச் செலவு செய்பவள் எவளோ அவளே நல்ல வாழ்க்கைத் துணைவியாவாள்.

*(ஆராய்ச்சி உரை)* வாழ்க்கைத் துணையாகிய மனைவிக்கு இந்தக் குறளில் இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. என்ன? ஒருவனுக்கு மனைவிதான் வாழ்க்கைத்துணையா? அவன் தாய் தந்தையர் என்ன ஆவது? அவன் உடன்பிறந்தார்கள் என்ன ஆவது? உற்றார் உறவின்முறையார் ஊரார் உலகத்தார் என்ன ஆவது? இவர்கள் எல்லாம் இருக்க நேற்றுவந்த பெண்டாட்டி வாழ்க்கைத் துணையாகி விடுவாளா? அவளுக்கு அவ்வளவு பெரியபேரா? ஆம், அவளே வாழ்க்கைத்துணை.

தாய்தந்தையரோ இறுதிவரை இருப்பதில்லை. இருக்கும் போதும் அவர்களது அன்பு பல பிள்ளைகளுக்கும் பங்கிடப்படுகிறது. உடன் பிறந்தார்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அவரவர்கட்கும் தனிக்குடும்பம் உண்டாகிவிட்டால், அதன் பிறகு அண்ணனாவது, தம்பியாவது! அண்டை வீட்டுக்காரனே மேல். உற்றார் - உறவின் முறையார், ஊரார் - உலகத்தாரோ, வாழ்ந்தாலும் பொறுக்க மாட்டார்கள் - தாழ்ந்தாலும் மதிக்க மாட்டார்கள். நண்பரோ, மனைவியோடு அவர் போய்க்கொண்டிருக்கும் போது ஏறிட்டுப் பார்க்கமாட்டேன் என்கிறார். சில சமயம் தெருவாயிற் படியோடு நிற்கவைத்துப் பேசியே வழியனுப்பி விடுகிறார். பிள்ளைகளுக்குள் பெண்பிள்ளைகளோ, அகப்பட்டவரையும் சுருட்டிக்கொண்டு அயலார் சொத்தாய்ப் போய்விடுகின்றனர். ஆண்பிள்ளைகளோ, திருமணம் செய்துவைத்துவிட்டால் அடியோடு மாறிவிடுகின்றனர். அவர்களுக்கு மனைவி என்ன - மாமனார் என்ன -மாமியார் என்ன- மைத்துனர்கள் என்ன - மைத்துனிகள் என்ன - இவர்களே நெஞ்சத்திரையில் நிழற்படம்போல ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

இப்படி ஒவ்வொன்றாகப் புடைத்துத் தூற்றிப் பார்த்தால்

கடைசியாகத் தேறுவது மனைவி என்னும் ஒரு பொருள்தான். அவன் வாழ்வு அவள் வாழ்வு - அவன் தாழ்வு அவள் தாழ்வு. இன்ப துன்பம் இரண்டிலும் இறுதிவரையும் இணைந்து நிற்பவள் அவளே! நான் இவ்வளவு எழுதியதைக் கொண்டு என்னைப் பெரிய 'பெண்டாட்டிதாசன்' என்று எவரும் எண்ணிவிட வேண்டா! இதனை நானாகச் சொல்லவில்லை. வள்ளுவர் சொல்லியிருக்கிறார் 'வாழ்க்கைத்துணை' என்று!

"இங்கே வள்ளுவர் அளவுமீறிப் புனைந்துரைத்து விட்டார். ஒருவேளை அவர் மனைவியார் அவ்வாறு நடந்திருக்கலாமோ, என்னவோ? சில பெண்டிரால், அவர்தம் கணவரது வாழ்க்கை பெரிதும் இடர்ப்படுகின்றதே - வாழ்க்கைக்கே இறுதி நேர்ந்து விடுகின்றதே! அவர் தமை 'வாழ்க்கைத்துணை' எனல் வள்ளுவர்க்கு அடுக்குமா? என ஐயுறலாம் சிலர். வள்ளுவர் என்ன கொக்கா? அவர் அவ்வளவு தெரியாதவரா? ஆழம் தெரியாமல் காலைவிட்டு அகப்பட்டுக்கொண்டு திணறுபவர் அல்லர் அவர். அதனால்தான், எல்லா மனைவியரும் வாழ்க்கைத் துணைகளாகி விடமுடியாது; மனைத்தக்க மாண்புடை யளாகித் தற்கொண்டான் வளத்தக்காளே வாழ்க்கைத் துணையாவாள் என்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

'மனைத்தக்க மாண்பு' என்பது என்ன? முறை தெரியாத பெண்ணொருத்தியை நோக்கி, குடித்தனம் செய்கின்ற பெண்ணா காரணமா தெரியவில்லையே என்று உலகியலில் பேசுவது வழக்கம். எனவே, குடும்பப்பெண் என்றால், அவளிடம் என்னென்னவோ நற்குண நற்செய்கைகளை மன்பதை (சமூகம்) எதிர்பார்க்கிறது, என்பது புலனாகும். 'நல்ல பெண்மணி' என்னும் தலைப்பில் இப்போது நாட்டில் ஒரு பாட்டுப் பாடுகின்றார்களே, அதன்படி ஒழுகினாலேயே கூட ஏறக்குறைய மனைத்தக்க மாண்புதான்.

அடுத்து "தற்கொண்டான் வளத்தக்காள்" என்றால் என்ன? கணவனும் மனைவியுமாக வெளியூரில் தனிக்குடும்பம் செய்கின்றனர் என வைத்துக்கொள்வோம். அங்கு மாமி இல்லை; மைத்துனி இல்லை;

ஓரகத்தி இல்லை; ஊர்வம்புக்காரி ஒருத்தியுமே இல்லை. ஆயினும் அடிக்கடி இருவர்க்குள்ளும் இரும்பெரும் போராட்டம் நடக்கின்றது. அதற்குரிய காரணங்களுள் முதலிடம் பெறுவது, மனைவி விரும்பும் பொருள்கள் எல்லாம் வீட்டிற்கு வந்து சேராமையே! "அதனால்" அவள் கணவனை மதிப்பதில்லை - பணிவிடை செய்வதில்லை. வேலைகளையும் செவ்வனே செய்து முடிப்பதில்லை. செலவாளிகளாக இருக்கின்ற அண்டைவீட்டு ஆறு முகத்தையும் எதிர் வீட்டு ஏகாம்பரத்தையும் எடுத்து ஈடு காட்டுகின்றாள். நீயும் ஓர் ஆண்மகனா என்று மானத்தை வாங்குகிறாள். குறைந்த வருவாயுடைய கணவன் என்ன செய்வான்? தன் எளிமையை வெளிக்காட்ட வெட்கி, கடன் வாங்கியாவது தொலைக்கிறான். அதன் பிறகு, ஆகா! இத்தகைய கணவர் கிடைப்பாரா என்ற புகழ்மாலை வீட்டில்! வாங்கிய கடனைக் கொடுக்க வழியற்றவன் என்ற இகழ்மாலை நாட்டில்!

செலவானது வரவுக்கு மேற்படாமல் உட்பட்டிருக்குமானால், குறைந்த வருவாயினால் தாழ்வு ஒன்றும் இல்லை என்னும் கருத்தில், "ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் கேடு இல்லை போகு ஆறு அகலாக்கடை" எனத்திருவள்ளுவரே தெரிவித்துள்ளார் மற்றோரிடத்தில். எனவே, நூறு காசு ஈட்டி மேலும் பத்துக்காசு கடன் வாங்குபவனைக் காட்டிலும், ஐம்பது காசு ஈட்டி அதில் ஐந்து காசு மிச்சப்படுத்துபவனே மேலானவன் என்ற "மந்திரத்தை" மனத்தில் இருத்தும் மங்கை நல்லாளே சிறந்த வாழ்க்கைத்துணையாவாள். இது குறித்தே, "தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" என்றார் ஆசிரியர். ஆகவே, மனைவி ஆடம்பரச்செலவுகளை அறவே அகற்ற வேண்டும். கணவன் அவ்வாறு செய்தாலும் அவனைத் திருத்தவேண்டும்.

இங்கே இன்னொன்றும் கவனிக்கவேண்டும். கருமித்தனமாய் இருக்கவேண்டுமென ஆசிரியர் சொல்லவில்லை. கணவனது வருவாய் வளப்பத்துக்குத் தக ஒழுகவேண்டும் என்றுதான் சொல்லியுள்ளார். எனவே, குறைந்த வருவாயானால் சிக்கனமாயிருக்கவேண்டும். நிறைந்த வருவாயானால் கூடியவரை பிறருக்கு உதவவும் செய்யலாம்.

இங்கே வளத்தக்காள் என்பதற்கு வேறொரு பொருளும சொல்லலாம். அதாவது, "கணவனது செல்வமாக இருக்கத்தக்கவள் - இவளே கணவனுக்குப் பெரிய செல்வவளம்" என்ற அழகு உரைதான் அது! இப்போது தீர்ப்பு வழங்குங்கள் - இத்தகையோளை வாழ்க்கைத் துணை என்று வாய்குளிர வழுத்துவதற்கு என்ன தடை? மேலும் துணை என்ற சொல்லுக்கு இணை - இரட்டை என்ற பொருளும் உண்டு என்பதும் இங்கே நினைவிருக்கட்டும்!

பெண் வைத்திருப்பவர்களே! மாப்பிள்ளையின் சொந்த வருமானத்தைக் கருதிப் பெண் கொடுப்பீராக! முன்னோர் சொத்தில் பிழைக்கும் தலையில்லாத முண்டங்களுக்குப் பெண் கொடாதீர்கள் என்று எச்சரிப்பது போல் "தற்கொண்டான் வளம்" என்னும் தொடர் அமைந்திருக்கின்றதல்லவா? பெண் பார்ப்பவர்களே! பணத்துக்காகவும் பளபளப்புக்காகவும் பெண் கட்டாதீர்கள்! பண்புக்காகப் பெண் கட்டுவீர்களாக என்று எச்சரிப்பதுபோல் "மாண்புடையள்" என்னுந்தொடர் அமைந்திருக்கின்றதல்லவா! என்ன அழகு!

## 2. *மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்*

*(பதவுரை)* இல்லாள்கண் = மனைவியிடத்தில், மனைமாட்சி இல்லாயின் = மனையறத்துக்கு (குடும்பத்துக்கு) வேண்டிய சிறப்புப் பண்புகள் இல்லாமற்போனால், வாழ்க்கை = (அவளைத் துணையாகக் கொண்டு நடாத்தும் குடும்ப வாழ்க்கையானது. எனை மாட்சித் தாயினும் = வேறு எத்தகைய சிறப்பினை உடையதாக இருந்தாலும், இல் = ஒன்றும் இல்லாததாகவே கருதப்படும். (இல்லாள் = மனைவி; எனை = எந்தவிதமான)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* குடிக்குத்தக்க வொழுக்கம் மனையாள் மாட்டு இல்லையாகில், அவ்வில்வாழ்க்கை எத்துணை நன்மைகளை

யுடைத்தாயினும் ஒரு நன்மையும் இன்றாம்.

*(பரி. உரை)* மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவனில்லாளிடத் தில்லையாயின் அவ்வில் வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமை யுடைத்தாயினும் அஃதுடைத்தன்று.

*(தெளிவுரை)* மனைவியிடம் குடும்பப் பண்புகள் - சிறப்புகள் இல்லையாயின் வேறு எது நிறைந்திருப்பினும் வாழ்க்கை சிறவாது.

*(ஆராய்ச்சி உரை)* மனைமாட்சி மனைவிக்கு இருக்கத்தானே வேண்டும். அதனால்தானே அவளுக்கு மனைவி என்னும் பெயரும் கொடுக்கப்பட்டது. மனைக்கு உரியவள் மனைவி. வள்ளுவரோ 'இல்லாள்' என்று அழைக்கிறார். இல் என்றால் வீடு. இல்லுக்குரியவள் - வீட்டுக்குரியவள் இல்லாள். இந்தச் சொல்லோடு தொடர்புடைய நயமான செய்தியொன்று நினைவிற்கு வருகிறது. தமிழினம் மனைவிக்குக் கொடுத்திருக்கும் மதிப்புக்கு, மனைவி, இல்லாள் என்னும் சொற்களே சான்று பகருமே! மேலும், ஆடவர் தம் மனைவியரை "எங்கள் வீட்டிலே" என்னுஞ் சொல்லால் குறிப்பிடுவது மரபு, ஆண்மகன் தான் சிறுவனாய் இருக்கிறபோது 'எங்கள் வீட்டிலே கேட்டார்கள்' எனத் தன் பெற்றோரை "வீட்டிலே" என்னுஞ் சொல்லால் குறிப்பிடுகிறான் - அவனே தனக்குத் திருமணமாகிவிட்ட பின்பு, தன் பெற்றோர் இருக்கும்போதே, "எங்கள் வீட்டிலே கேட்டார்கள்" எனத்தன் மனைவியை "வீட்டிலே" என்னும் சொல்லால் குறிப்பிடுகிறான். என்ன விந்தை இது! ஒருவர் தம் நண்பரிடம் "எங்கள் வீட்டிலே வாங்கிவரச் சொன்னார்கள்" என்பார். வீட்டிலே என்றால் உன் தந்தையார் வாங்கிவரச் சொன்னார் போலும் என்பார் நண்பர். இல்லையையா, எங்கள் வீட்டிலே என்கிறேன்.- நீ என்னவோ தந்தையாரா என்று கேட்கிறாயே என்பார் இவர். உடனே நண்பர், ஓகோ! உன் தாயார் வாங்கிவரச் சொன்னாரா? சரிதான், அப்படிச் சொல்லு என்பார். அதற்கு இவர், இல்லையையா இல்லை, எங்கள் வீட்டிலே வீட்டிலே என்று அடித்துக் கொள்கிறேன். மறுபடியும் தாயாரா என்று கேட்கிறாயே, வீட்டிலே என்றால் வேறு யாரையா? என்

மனைவிதான் வாங்கிவரச் சொன்னாள் என்பார். உடனே நண்பர், ஓ அப்படியா! தாய்தந்தையரைவிட மனைவி இருந்தால்தான் உனக்கு வீடு வீடாகத் தெரியும் போலும் எனக்கூறி நகையாடுவார். நான் இவ்வளவு நேரம் வீண்கதை எழுதவில்லை. எழுத்துக்கு எழுத்து இந்தக் குறளின் விளக்கமேயாகும். வள்ளுவர் இல்லாள் இல்லாள் என்று சொல்லியிருப்பதிலுள்ள உண்மை இதுதான்! ஒரு சிலர் இந்தத் "தத்துவத்தை" இன்னும் கூர்மையாகப் புரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. மனைவி பேரால் வீடு வாங்குபவர்களைத்தான் சொல்லுகிறேன். ஆனால், அவர்கள் பங்காளிக்குப் பாய்ச்சல் காட்டுவதற்காகவும், கடன்காரர்களுக்குக் கடுக்காய் கொடுப்பதற்காகவும், பெண்டாட்டி பேரால் வீடுகளை வாங்கிப் போட்டுவிட்டதாக உலகினர் சொல்கின்றனர். அவர்களைக் கேட்டால், நாங்கள் "இல்லாள்" என்னும் திருவள்ளுவர் வாக்குக்கு மதிப்புக் கொடுக்கிறோம் என்று சொல்வார்களோ என்னவோ! தீர்ப்பை உங்கள் பொறுப்பிலேயே விட்டுவிடுகிறேன்.

சில குடும்பங்களில் கணவன் கட்டிக்கரும்பாய் இனிக்கிறான்; மனைவியோ எட்டிக்காயாய்க் கசக்கிறாள். எனவே, கணவனுக்குப் பண்பாடு இருந்தால் போதாது; மனைவிக்கு மாட்சிமை வேண்டும் என்பதை வற்புறுத்தவே, "இல்லாள் கண் இல்லாயின் இல்" என்று அடுக்கினார் ஆசிரியர். இங்கே, இல்லாள் என்பதன் இறுதியில் உள்ள "ள்" என்னும் எழுத்தையும், "கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபில் உள்ள "ண்" என்னும் எழுத்தையும் நன்கு அழுத்தந் திருத்தமாக ஒலிக்க (உச்சரிக்க) வேண்டுமல்லவா? அவ்வாறு அழுத்தி ஒலிக்கும்போது, அந்த வற்புறுத்தல் குறிப்புத் தோன்றுவது காண்க. இன்னும் இரண்டுமுறை சொல்லிப் பார்ப்போம், 'மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின்', 'மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்' என்ன சொல்நயம்! எவ்வளவு பொருள் நயம்! நேரில் பாடம் சொல்லும் பொழுது, இந்த நுணுக்கங்களையெல்லாம் இன்னும் நன்றாக எடுத்துக் காட்ட முடியுமல்லவா?

கணவனோ பட்டம் பல பெற்றவன்; பதவிமேல் பதவி வ மோதுகிறது; பணங்காசோ மிகுதி - இன்னும் எல்லாம் இருக்கின்ற ஆனால் ஒரே ஒரு குறை. அதுதான் மாட்சிமையுடைய மனைவி கிடைக்காத குறை. அது இல்லாமல் வேறு எது இருந்துதான் என்ன பயன்? அவளை விரட்ட முடியாது. அன்றைக்கு ஆயிரம் பேருக்கு முன்னாலே தாலி கட்டினாயே - அவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு வா! எனக்கு ஆக வேண்டியதைத் தீர்த்துவிடு என்று மிரட்டுவாள். எனவே, இவன்தான் கூறாமல் "சந்நியாசம்" கொள்ளவேண்டும். இவ்வாறு கொள்ளலாமா? இதுவா இல்வாழ்க்கைக்கு அழகு? இதனால்தான், "வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்" என்றார் வள்ளுவனார்.

இங்கே வள்ளுவர்க்கு ஒன்றும் ஓடவில்லை - ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பம் - உணர்ச்சி வயப்பட்டுவிட்டார். பிற மாட்சிகளினும், மேலானதாக மனைமாட்சியைச் சிறப்பிக்கவந்த ஆசிரியர், இந்த மாட்சி இருந்தாலும் போதாது, அந்த மாட்சி இருந்தாலும் போதாது என்று எவையேனும் சில மாட்சிகளையாயினும் குறிப்பிட்டிருக்க வேண்டுமல்லவா? எதைக் குறிப்பிட்டாலும் ஈடாகாதுபோல் தெரிகிறது. எனவே, போங்களையா, அது எந்த மாட்சியாயிருந்தாலும் முடியாது என்னும் கருத்தில், "எனைமாட்சித்தாயினும்" என்று சொல்லிவிட்டார். மனைமாட்சி இல்லாவிடின், வாழ்க்கை இனிக்காது - சிறக்காது என்று சொல்லி யிருக்கலாமே எனின், வாழ்க்கை இருந்தல்லவா அதன்பிறகு இனிப்பது - சிறப்பது? வாழ்க்கையே இல்லை போங்களையா என்று சொல்பவர்போல் எனைமாட்சித்தாயினும் "இல்" என்று ஒரே அடியாய் அடித்துவிட்டார். எனவே, மனைக்கு வாய்த்துள்ள மங்கையர்களே! என்ன செய்ய இருக்கின்றீர்கள்?

*3. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்*
*இல்லவள் மாணாக் கடை.*

*(பதவுரை)* இல்லவள் மாண்பானால் = மனைவி

மாட்சிமையுடன் விளங்கினால், இல்லது என் = வீட்டில் இல்லாத பொருள் என்ன? இல்லவள் மாணாக்கடை = மனைவி மாண்பின்றி யிருந்தால், உள்ளது என் = வீட்டில் இருக்கக்கூடிய பொருள் யாது? ஒன்றும் இராது. (இல்லவள் = மனைவி; மாண்பு = நற்குண நற்செய்கை தகுதி திறமை முதலியன உடைத்தா யிருத்தல்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண. உரை)* ஒருவனுக்கு மனையாள் மாட்சிமை யுடையாளானால், எல்லா மிலனே யாயினும் இல்லாதது யாது? மனையாள் மாட்சிமை இல்லாளானால் எல்லாமுடையானாயினும் உண்டானது யாது?

*(பரி. உரை)* ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையளாயினக்கால் இல்லாததியாது! அவள் அன்னளல்லாக்கால் உள்ளது. யாது?

*(தெளிவுரை)* மனைவிக்கு மாண்பு இருந்தால், குடும்பத்தில் இல்லாதது என்ன? எல்லாம் இருக்கும். மனைவிக்கு மாண்பு இல்லையானால், குடும்பத்தில் உள்ளது என்ன? ஒன்றும் இருக்காது.

*(ஆராய்ச்சி உரை)* இந்தக் குறள், குடும்ப அறிவியலின் (Home Science) எல்லைக்கோட்டைத் தொட்டுவிட்டது - இல்லை, எல்லைக்கோட்டையும் தாண்டிவிட்டது. இதற்குமேல் இன்னும் எந்தெந்தச் சொற்களால் குடும்பக் கலையின் உயர்நிலையை உரைத்துக் காட்டமுடியும்? வீட்டில் ஒன்றும் இல்லாவிடினும் மனைவிக்கு மாண்பு மட்டும் இருந்துவிட்டால், மனைக்கு வேண்டிய மற்ற எல்லாம் இருப்பதாகவே பொருளாம். வீட்டில் எல்லாமே இருந்தாலும் மனைவிக்கு மாண்பில்லையாயின் ஒன்றும் இல்லாததாகவே பொருளாம். இதனை இல்லது என்? உள்ளது என்? என்னும் வினாக்களால் விளங்க வைத்துள்ளார் ஆசிரியர். இங்கே வள்ளுவர், திட்டவட்டமாகத்

தெளிவான ஒரு முடிவுக்குத் துணிந்து வந்து விட்டவராகக் காணப்படுகிறார். வேறு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும், குடும்பத்துக்கு உண்மையான மூலதனம் மனைவியே - அதுவும் மாண்புமிக்க மனைவியே என்பது வள்ளுவர் கருத்து. இதனை இந்தக் குறளில் இல்லவள் - இல்லவள் என இருமுறை கூறியிருப்பதும், "மாண்பானால்; "மாணாக்கடை" என்னும் இருவகை உடன்பாட்டு, எதிர்மறை எச்ச முடிவுகளும் உணர்த்தி நிற்கின்றன வன்றோ? மாண்பானால், மாணாக்கடை என்பவற்றின் இறுதியில் உள்ள "ஆனால்", "கடை" என்னும் இரண்டும் ஒருவகை வினையெச்ச விகுதி முடிவுகளாம்.

இனி, இக்குறட் கருத்தைச் சிறிது விளங்க நோக்குவாம் :- வீட்டில் போதிய பொருள்கள் இல்லாவிடினும், போதிய திறமையும் ஊக்கமும் உடைய மனைவி, எல்லாம் இருக்கும் வீட்டைவிடத் தன் குடும்பத்தைச் சீர்திகழச்செய்வாள்; திறமையும் ஆர்வமும் இல்லாதவளோ, எல்லாம் இருப்பினும், ஒன்றும் இல்லாத வீட்டை விடத் தன் குடும்பத்தைப் பாழ்படுத்துவாள். முன்னவள் செட்டாகப் புதிய பொருள்களைச் சேகரிப்பாள் - நீண்டநாள் வைத்துப் படைப்பாள். பின்னவளோ, புதிய பொருள்களைச் சேகரிப்பதுஞ் செய்யாமல் உள்ள பொருள்களையும் விரைவில் அழித்து ஒன்றும் இல்லையாக்குவாள். முன்னவள், வீட்டிற்கு விருந்தினர் வந்தால், குறைந்த பொருளைக் கொண்டே பலவகைக்கறிகள் செய்து உணவு படைப்பாள்; பின்னவளோ, எல்லாம் இருப்பினும், இரண்டொன்றும் சரியாய்ச் செய்யாது கடனைக் கழித்தனுப்புவாள். முன்னவள் தன் ஏழைக் கணவன் இன்று காய்கறி வாங்கக் காசு இல்லையே என்றால், நேற்று வாங்கி வந்தவற்றுள் மிச்சம் உளது என்பாள்; பின்னவளோ, தன் கணவன் இன்றைக்கு என்ன வேண்டும் என்றால், நேற்று வாங்கி வந்தவை போதவில்லை, இன்றைக்கு இன்னும் நிறைய வாங்கிவர வேண்டுமெனக் கட்டளையிடுவாள். மேலும், இருப்பதைக் கொண்டு

கணவன் முதலியோரை இன்புறுத்தித் தானும் இன்புறுவாள் முன்னவள்; எல்லாம் இருப்பினும், ஒரு விழுங்கு வெந்நீருக்கு வழியின்றித் திண்டாடித் தவிக்கவிடுவாள் பின்னவள். வேறு துறைகளிலும் இவ்விதமே - இவ்விதமே! ஆவது முன்னவளால்; அழிவது பின்னவளால், இதனாலேயே, முன்னவள் வீடு எல்லாம் உடையதாகவும், பின்னவள் வீடு ஒன்றும் இல்லாததாகவும் வள்ளுவரால் உரைக்கப்பட்டன. இக்குறட் கருத்தே, "இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றில்லை" என்னும் ஔவையின் மொழிக்குச் செவ்வியளிக்கின்றது. இங்கே, திருவள்ளுவரின் மனைவியார், இளையான்குடி மாறரின் மனைவியார் போன்ற நற்பெண்டிரின் வரலாறுகள் நமக்குப் போதிய சான்று பகரும். மாண்பு அற்ற பத்து மாட்டுக்காரி, மாண்பு பெற்ற ஒரு மாட்டுக்காரியிடம் பால் வாங்கிய கதை பலரும் அறிந்ததே!

4. *பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை உண்டாகப் பெறின்.*

*(பதவுரை)* (ஒரு பெண்ணிடத்தில்) கற்பு என்னும் - கற்பு என்று சொல்லக்கூடிய, திண்மை - (எண்ணம், சொல், செயல் என்பவைகள்) கலங்காத வலிமை, உண்டாகப் பெறின் - இருக்கப்பெற்றால், பெண்ணின் - (அத்தகைய) பெண்ணைக் காட்டிலும், பெருந்தக்க - பெரிய தகுதி வாய்ந்த மேலான பொருள்கள், யா உள - (இவ்வுலகத்தில்) யாவை உள்ளன? (ஒன்றும் இல்லை)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* பெண் பிறப்புப்போல மேம்பட்ட யாவை உள? கற்பாகிய திண்மை உண்டாகப் பெறின்.

*(பரி-உரை)* ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவை யுள, அவள் மாட்டுக் கற்பு என்னும் கலங்கா நிலைமை உண்டாகப் பெறின்.

*(தெளிவுரை)* கற்பென்னும் கலங்காவன்மை இருந்தால், உலகில் பெண்ணை விட மேலான பொருள்கள் யாவை?

*(ஆராய்ச்சி உரை)* "கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை" என்றார் ஒரு பெரியார். கற்பு எனப்படுவது, "கட்டிய கணவன் கல்லா யிருந்தாலும் வேறு எவரையும் கருத்தாலும் கருதாத தூய்மை" என்கின்றனர் ஒரு சிலர். "பிறந்த வீட்டில் பெற்றோரும், புகுந்த வீட்டில் கணவன் முதலியோரும் கற்பித்தபடி ஒழுகுதலே கற்பு" என்கின்றனர் ஒரு சிலர்.

"சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்" என்னும் அழகு பொருந்தக் கற்பு என்னும் சொல்லுக்கு நாம் பொருள் காண்போமாயின், திருக்குறளுள், வாழ்க்கைத்துணை நலம் என்னும் இப்பகுதியுள், பெண்கட்கு இருக்க வேண்டுவனவாகக் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தையும் கற்று, அவற்றைச் செயல்முறையில் செய்து காட்டுவதே சிறந்த கற்பாகும் என்று ஒருவாறு துணியலாம். இதனுள் அடங்காததாக ஏனையோரால் இயம்பப்படும் கற்பு நிலைதான் யாதுளது?

"பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு, பெண்டு வாய்க்கும் புண்ணியவானுக்கு" என்னும் மொழிப்படி, இருப்பதைக் கொண்டு இல்லாததையும் ஈட்டி, கணவன் களிக்கக் கற்புக்கடன் பூண்டு திகழும் ஒரு மங்கையை மனைவியாகப் பெற்ற மணவாளனுக்கு, அவளினும் மாநிலத்தில் பெறத்தக்க மாண்பொருள் வேறு யாது? ஒன்றும் இல்லையென்பது குறட்கருத்து.

## 5. *தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்*
## *பெய்யெனப் பெய்யும் மழை.*

*(பதவுரை)* தெய்வம் - கடவுளை, தொழாஅள் - வணங்காதவளாகிய, கொழுநன்-கணவனையே, தொழுது-வணங்கி, எழுவாள்-(பின்பே) எழுந்து சென்று வேறு வேலை செய்யும் பெண்மணி, பெய் என - பெய் என்று (மழைக்குக்) கட்டளையிட, மழை பெய்யும் - மழையானது பெய்யும்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* தெய்வத்தைத் தெய்வம் என்று தொழாளாய், எல்லாத் தெய்வமும் தன் கணவன் என்றே கருதி, அவனை நாடோறும் தொழுது எழுவாள் பெய் என்று சொல்ல மழை பெய்யும்.

*(பரி.உரை)* பிற தெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயில் எழுவாள் பெய்யென்று சொல்ல, மழை பெய்யும்.

*(தெளிவுரை)* கணவனையே கடவுளாகக் கருதும் கலங்காத கற்புடைய பெண்கள், இயற்கைக்குத் தாம் அடிமையாகாமல், இயற்கையைத் தம் அடிமையாக்கி, எடுத்த காரியத்தை இனிதே முடிப்பர் என்பது குறிப்பான கருத்து.

*(ஆராய்ச்சி உரை)* கற்புடைய பெண்ணின் வாய்ச் சொல்லுக்கும் மழைக்கும் மின்சாரத் தொடர்பு இருக்கின்றதா என்ன? இயற்கையின்படிப் பெய்தலும், பெய்யாமையும் செய்கின்ற மழை, ஒரு பெண் சொல்லிவிட்டால் பெய்யுமா? மழை பெய்யாத இடங்களில் பெய்யும்படிப் பெண்கள் ஏவலாமே! ஒருவேளை அங்கே கணவனை மட்டுமே தொழும் கற்புறு மடந்தையர் இல்லைபோலும்! அல்லது, கற்புறு மடந்தையர் ஒரு சிலராவது இருப்பதனால்தான், கொஞ்சம் மழையாவது பெய்து நெஞ்சை நனைக்கின்றதா? அல்லது, வஞ்சகர் நிறைந்த இவ்விடங்கள் வாடட்டும் என்று சிலவிடங்களில் உள்ள கற்புறு மங்கையர் பெய்யவேண்டாம் என்று கட்டளையிட்டு விட்டார்களா? ஒருவேளை திருவள்ளுவர் வேண்டுமென்றே புனைந்துரைத்துள்ளாரா? அல்லது விஞ்ஞானம் தெரியாதவரா? என்றெல்லாம் பற்பல எண்ணங்கள் பரந்துபட்ட மக்களிடத்துத் தோன்றுவது இயற்கை!

விஞ்ஞானிகள் விரும்பினால் செயற்கை முறைகள் சிலவற்றால் செய்வித்துப் பெய்விக்கலாமே தவிர, ஒரு பெண் பெய் என்று சொல்லிய

அளவில் மழை பெய்யவே பெய்யாது. இஃது உறுதி! உறுதி!! ஆயின் திருவள்ளுவர் இங்ஙனம் தெரிவித்திருப்பதின் நோக்கம் என்னவென்பதை ஆராயவேண்டும்.

ஒழுங்காகக் குடும்பம் நடாத்தும் பெண், முன்னிய காரியத்தை முட்டின்றி முடிப்பாள் என்பதே இக்குறளில் குறிப்பாகக் கொள்ளவேண்டிய கருத்தாகும். இங்குத் திருவள்ளுவர் எடுத்துக்கொண்ட பொருளைச் சிறப்பிக்க வேண்டும் என்று கருதிக் கற்பனையையே கையாண்டுள்ளார். இது ஒருவகையான கவிமரபு. இன்னோரன்ன கவிமரபுகளைக் குற்றம் உடையதாகத் தள்ளமுடியாது.

வள்ளுவர் ஓரிடத்தில், துன்பத்திற்குக் கலங்காதவர் துன்பத்திற்கே துன்பம் கொடுப்பர் என்னும் கருத்திலும், துன்பம் துன்பப்படும் என்னும் கருத்திலும்

*"இடும்பைக்கு இடும்பை படுப்பர்"*
*"இடுக்கண் இடுக்கண் படும்"*

என்று கூறியுள்ளார். உண்மையில் துன்பம் ஓர் உயிருள்ள பொருளா? அத்துன்பத்திற்கு ஒருவர் துன்பம் கொடுப்பது என்பதும், அத்துன்பம் துன்பப்படும் என்பதும் முயற்கொம்பும், குதிரைக் கொம்பும் அல்லவா? இதன் உண்மைக்கருத்து என்ன? துன்பத்திற்காக மனம் சோராமல் இருந்தால் அத்துன்பம் துன்பமாகத் தோன்றி வருத்தாது நீங்கும் என்பதே.

மற்றோரிடத்தில், பிறந்த குடிக்குப் பெருமை தருவேன் என்று முயலும் ஒருவனுக்கு, கூடத் தெய்வமும் தன் இடுப்பு உடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு வந்து உதவி செய்யும் என்னும் கருத்தில், "குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும" என்றியம்பியுள்ளார் வள்ளுவர். உண்மையில் தெய்வம் இடுப்பு உடையை இறுக்கிக் கட்டாவிட்டால், உடை அவிழ்ந்து விழுந்துவிடுமா? எனவே, இன்னோரன்னவை யெல்லாம், எடுத்துக்

கொண்ட கருத்தை வற்புறுத்துவதற்காகவும், கற்போர்க்குச் சுவை தருவதற்காகவும் கவிகள் கையாளும் கற்பனை மரபு என்பது காணக்கிடக்கும். அன்று தொட்டு இன்று மட்டும் எந்தக் கவிதான் கற்பனையைக் கையாளவில்லை. ஆனால், கற்பனையென்னும் திரைமறைவில், புராணங்கள் புளுகுகின்ற அண்டப்புளுகு, ஆகாயப் புளுகுகளை யெல்லாம் அடக்க வேண்டும் என்று சொல்ல வரவில்லை; அகற்ற வேண்டும் என்பதே. அளவு மீறின் அமிழ்தமும் இனிக்காதே; நஞ்சாகுமே!

மேலும், இக்குறளுக்கு, கணவனை வணங்கும் கற்புடைய பெண், பெய்யென்று சொன்னால் பெய்யக்கூடிய ஒரு மழை இருந்தால் எவ்வளவு நன்மை பயக்குமோ அவ்வளவு நன்மையைக் குடும்பத்திற்குச் செய்வாள் என ஒரு பொருள் கூறுதலும் உண்டு. இங்ஙனம் கூறின், இல்லாத பொருளை எடுத்துக் காட்டும், "இல்பொருள் உவமையணி" உடையதாக இக்குறளைக் கொள்ளவேண்டும்.

இன்னும் இக்குறளுள், படுக்கையை விட்டு எழுந்தபின்பு அல்லவா தொழமுடியும்; தொழுது எழுவதாகக் கூறியுள்ளமை எங்ஙனம் பொருந்தும் என ஒரு வினா எழுதல் உண்டு. உண்ண அமர்ந்தவனை நோக்கி, அழைக்க வந்தவன் "இன்னுமா உண்ணுகிறாய்" என்று கேட்கிறான். அமர்ந்தவன் சோற்றில் கூட இன்னும் கைவைக்கவில்லை; இருப்பினும், "இதோ வந்துவிட்டேன்" என இறந்த காலத்தால் கூறுகிறான். விரைவும், உறுதியும்பற்றிப் பின் செய்யப்போவதை முன் செய்ததாகக் குறிப்பிடுவது உலக இயல்புகளுள் ஒன்றன்றோ? தொழுது எழுவதையும் இங்ஙனமே கொள்ளவேண்டும்.

## *6. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்.*

*(பதவுரை)* தன் காத்து - தன்னை (ஒழுக்கம், உடை, உணவு முதலியவற்றால்) நன்கு காப்பாற்றிக் கொண்டு, தன் கொண்டான்

- தன்னை மனைவியாகக் கொண்ட கணவனையும், பேணி - நன்கு (உபசரித்து) காப்பாற்றி, தகைசான்ற - (தமக்கிருக்கின்ற) தகுதி நிறைந்த, சொல்-புகழ் மொழியை, காத்து - (நீங்காது) காப்பாற்றி, சோர்வு இலாள் - (எந்தக் காரியத்திலும்) சோர்வு கொள்ளாதவளே, பெண் - சிறந்த பெண்ணாவாள்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* தன்னையும் காத்து, தன் கணவனையும் பேணி, நன்மை யணிந்த புகழ்களையும் படைத்துச் சோர்வின்மை உடையவளே பெண்ணென்று சொல்லப்படுவள்.

*(பரி-உரை)* கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துத் தன்னைக்கொண்டவனையும் உண்டி முதலியவற்றால் பேணி, இருவர் மாட்டும் நன்மை யமைந்த புகழ் நீங்காமல் காத்து, மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினும் கடைப்பிடி உடையாளே பெண்ணாவாள்.

*(தெளிவுரை)* தன்னையும் வழுவாது காத்துத் தன் கணவனையும் அன்புடன் போற்றித் தகுதிமிக்க புகழை நிலைநிறுத்தித் தளர்ச்சி கொள்ளாதவளே சிறந்த குடும்பப்பெண்.

*(ஆராய்ச்சி உரை)* பெண், தன்னையும் கணவனையும், குடும்பப் பெருமையினையும் காப்பாற்றிச் சோராதிருக்க வேண்டும்.

முன் அதிகாரத்தில் 'இயல்புடைய மூவர்க்கும்' என்ற இடத்தில், பெற்றோர், மனைவி, மக்கள் என உரை எழுதினோம். பின்னர், "தென்புலத்தார்" என்னும் குறளில், தான் என்பதற்குக் கணவனைக் (குடும்பத் தலைவனை) குறித்தோம். கணவன் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும் என்றால் மனைவியும் அடங்கிவிடவில்லையா? மனைவியைக் காக்கவேண்டும் என்று தனியாக வேறு கூறவேண்டுமா? என்று சிலர் எம்மை வினவினர். இக்குறளைக் கூர்ந்து நோக்கவேண்டுகிறோம். தன்னைக் காப்பதோடு கணவனையும் காப்பது மனைவியின் கடமை என்று இங்கே கூறும்போது, தன்னைக்

காப்பதோடு மனைவியையும் காப்பது கணவனின் கடமை என்று அங்கே கூறியதில் என்ன பிழை?

7. *சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை.*

*(பதவுரை)* சிறை-(வீடு, அறை முதலியன) சிறைகளைக் கொண்டு, காக்கும்-(பெண்களைக்) காவல் காக்கின்ற, காப்பு-காவல், எவன் செய்யும்- என்ன பலனைத் தரும்? (ஒன்றும் தராது; ஆதலின்) மகளிர் - பெண்கள், நிறை - தம் கற்பு நிறைவால், காக்கும் - (தம்மைத் தாமே) காத்துக் கொள்ளும், காப்பே-காவலே, தலை - தலைசிறந்த காவலாகும்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* மகளிரைச் சிறை செய்து காக்கும் காவல் யாதினைச் செய்யும்? அவரது கற்புக் காக்கும் காவலே தலையான காவல்.

*(பரி-உரை)* மகளிரைத் தலைவர் சிறையால் காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்? அவர் தமது நிறையால் காக்கும் காவலே தலையாய காவல்.

*(தெளிவுரை)* தூங்குபவனை எழுப்ப முடியும்; விழித்திருப்பவனை எழுப்ப முடியாது; அதுபோல, தன் ஒழுக்கத்தில் தனக்கே கவலையுள்ள பெண்ணையே பிறரால் காக்கமுடியும். அல்லாத பெண்ணை அறையில் இட்டுப் பூட்டினும் காக்கமுடியாது.

ஆண், பெண் இருபாலார்க்கும் அறிவுரை வழங்குவதே இக்குறள். பெண்களைப் பூட்டிவைக்கும் பேதையர்களே! அவர்கட்கு விடுதலை நல்குங்கள்! எங்கிருப்பினும், எங்குச் செல்லினும் நல்லோர் நல்லோரே! அல்லோர் அல்லோரே! என்று ஆண்கட்கும், அரிவைமார்களே! ஆண்களால் உங்களை அடக்கமுடியாது; நீவிரே

நும்மை நேரிதின் நடத்திக்கொள்ள வேண்டும் என்று பெண்கட்கும் தெளிவுறுத்துகின்றார் தெய்வப் புலவர்.

*8. பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு.*

*(பதவுரை)* பெண்டிர்-பெண்கள், பெற்றான்-தம்மை உள்ளன்போடு ஏற்று (பெற்று) வாழும் கணவரை, பெறின் -உள்ளன்போடு கணவராக ஏற்று வாழ்வார்களேயானால், புத்தேளிர் வாழும்-தேவர்கள் வாழ்கின்ற, உலகு-வானுலகின்கண், பெரும் சிறப்பு-மிகப் பெரும் சிறப்புக்களை, பெறுவர்-அடைவார்கள்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* பெண்டிரானவர் தம்மை மனைவியராகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப் பெறின், தேவர் வாழும் பெரிய சிறப்பினையுடைய உலகத்தைப் பெறுவர்.

*(பரி-உரை)* பெண்டிர் தம்மை எய்திய கணவனை வழிபடுதல் பெறுவாராயின், புத்தேளிர் வாழும் உலகின்கண் அவரால் பெருஞ் சிறப்பினைப் பெறுவர்.

*(தெளிவுரை)* மகளிர் தன் கணவரின் நல்லன்பையும் நன்மதிப்பையும் பெறும்படி நடந்துகொள்ளின், தேவர் வாழும் விண்ணுலகில் பெரும்பேறு பெறுவர். எடுத்துக்காட்டு வேண்டுமானால் கண்ணகி சாலும். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் பெறுதல் என்றால், இரண்டறக் கலந்து இயைந்து வாழ்தல். "பெற்றாற் பெறின்" என்று பாடங்கொண்டார் மணக்குடவர்.

*9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை.*

*(பதவுரை)* புகழ்-புகழ்ச்சியான செயலை, புரிந்த-விரும்பிய, இல்-மனைவி, இலோர்க்கு-இல்லாத ஆடவர்க்கு, இகழ்வார்முன்

- (தம்மை) இகழ்ந்து பேசும் எதிரிகளின் முன்னே, ஏறுபோல்- ஆண்சிங்கத்தைப் போல (இறுமாப்புடன் நடக்கக்கூடிய) பீடு நடை - பெருமிதமான நடை, இல்லை-இல்லையாம்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* புகழ் பொருந்தின மனையாளை இல்லாதார்க்கு இல்லையாம், தம்மை இகழ்ந்துரைப்பார் முன் ஏறுபோல நடக்கும் மேம்பட்ட நடை.

*(பரி-உரை)* புகழை விரும்பிய இல்லாளை இல்லாதார்க்கு, தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர் முன் சிங்கஏறுபோல் நடக்கும் பெருமித நடை இல்லை.

*(தெளிவுரை)* புகழுக்குரிய மனைவி கிடைக்கப்பெறாதவன் பிறர்முன் தலைநிமிர்ந்து நடக்க முடியாது; எல்லோராலும் இகழவும் படுவான். "நம்மிடம் ஐயா காட்டும் ஆர்ப்பாட்டம் எல்லாம், அடுப்பங்கரையில் அம்மாவிடம் சென்றால் அடங்கிவிடும்" என்று பெண்டாட்டி யடியவர்களை நோக்கி உலகினர் எள்ளி நகையாடும் இகழ்ச்சியினையே, இக்குறளுள் நுணுக்கமாக நுழைத்துள்ளார் நுண்மாண் புலவர்.

*10. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு.*

*(பதவுரை)* மங்கலம்-(வீட்டிற்கு) மங்கலப் பொருளாவது, மனைமாட்சி - மனைவியினுடைய மாட்சிமையே; மற்று-பின்பு, அதன்-அந்த மனைமாட்சியினுடைய, நன்கலம்-நல்ல அணிகலமாவது, நன்மக்கள் - நல்ல பிள்ளைகளை, பேறு-பெறும் பேறே யாகும்; என்ப-என்று சொல்லுவர் அறிவுடையோர்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மணக்-உரை)* ஒருவனுக்கு அழகென்று சொல்லுப மனையாள் ஒழுக்கம் உடையாளாதலை; அவ்வழகின்மேல் நல்ல அணிகலன் என்று சொல்லுப, நல்ல புதல்வரைப் பெறதலை.

*(பரி-உரை)* ஒருவருக்கு நன்மை யென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை; அவை தமக்கு நல்ல அணிகலம் என்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை.


*(தெளிவுரை)* வீட்டிற்கு விளக்கம் பெண்கள்; பெண்கட்கு விளக்கம் நல்ல பிள்ளைகள் என்பது கருத்து. இங்கு, "மனைக்கு விளக்கம் மடவார், மடவார் தமக்குத் தகைசால் புதல்வர்" என்னும் நான்மணிக்கடிகைச் செய்யுள் ஒப்பு நோக்குதற்குரியது. (இக்குறளின் விளக்கமே, எம்மால் எழுதப்பெற்றுள்ள "வீடும் விளக்கும்" என்னும் தனித்தமிழ் நூல்)

## அதிகாரச் சுருக்கம்

பெண்கள், இல்லறத்திற்கு வேண்டிய மாண்பும், வரவுக்கேற்ற செலவும், கணவனைத் தெய்வமாகக் கொள்ளும் கற்பும், சோர்வின்மையும், தம்மைத்தாமே காக்கும் நிறையும் உடையவர்களாக இருக்கவேண்டும். இத்தகைய பெண்கள் இருக்கும் வீட்டில் எல்லாம் இருக்கும். அவரினும் சிறந்த பொருள் உலகில் ஒன்றும் இல்லை. அவர் நினைத்த காரியத்தை முடிப்பர். வானுலகிலும் சிறப்புப் பெறுவர். கணவர்க்கும் அவரால் பெருமிதம் கிடைக்கும்.

இறுதியாக, பெண்கட்கு விளக்கம் பிள்ளைகள் எனக்கூறி, மக்கட்பேறு என்னும் அடுத்த அதிகாரத்திற்கு அடிப்படையிட்டுளார் அறிஞர் வள்ளுவனார்.

❖ ❖ ❖



மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்

# மக்கள் பேறு

மக்கள் பேறு என்றால், நல்ல பிள்ளைகளைப் பெறும்பேறு என்பது பொருள். வாழ்க்கைத்துணை நலத்திற்குப்பின் மக்கட்பேறு அமைக்கப்பெற்றதற்குரிய இயைபுமுன் குறளாலேயே உணர்த்தப் பெற்றது.

இப்பகுதிக்கு 'புதல்வரைப் பெறுதல்' என்றல்லவா பெயர் எழுதியுள்ளார் பரிமேலழகர். ஈண்டு ஒரு சிலர் "மக்கட்பேறு" என்று எழுதுவதின் காரணம் என்னையோவெனின், இயம்புதும்: முன் அதிகாரத்திலும் மக்கட்பேறு என்றே தோற்றுவாய் செய்துள்ளார் வள்ளுவர். இவ்வதிகாரத்தும் அனைத்திடங்களிலும் மக்கள் என்ற பெயரையே வழங்கியுள்ளார்; ஆதலின் என்க. மேலும், மக்கள் என்னும் செந்தமிழ்ச் சொல் இருக்க, புதல்வர் என்னும் புதுமொழிச் சொல்லைப் புகுத்துவது எற்றுக்கோ? வள்ளுவர்க்கு அந்நோக்கம் இருந்திருப்பின் குறள்களிலேயும் புதல்வர் என்னும் சொல்லைப் புகுத்தியிருப்பாரே! புதல்வர்க்காகப் பரிந்து போராடும் சிலர், பிள்ளை "புத்" என்ற நரகத்திலிருந்து தந்தையை மீட்பதால் புதல்வர் என்னும் பெயரே பொருந்தும் என்கின்றனர். மீட்கக்கூடாது, நரகத்திலேயே தள்ளவேண்டும் என்று யாம் சொல்லவரவில்லை. நன்றாக மீட்டுச் சுவர்க்கத்திற்கே அனுப்பட்டும். ஆனால், நரகத்திலிருந்து மீட்பது பிள்ளையா? (மனிதரா?); அல்லது புதல்வர் என்னும் சொல்லா? (எழுத்துக்களா?) மீட்பது சொல்லன்று, பிள்ளையே யென்றால் மக்கள் என்னும் சொல்லை வழங்குவதில் என்ன தவறு?

1. *பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
   *மக்கட்பே றல்ல பிற.*

*(பதவுரை)* பெறுமவற்றுள் - (ஒருவன்) பெறவேண்டிய பேறுகளுக்குள், அறிவு அறிந்த - அறிய வேண்டியவைகளை

அறிவினால் அறியவல்ல, மக்கள் பேறு - (நல்ல) மக்களைப் பெறுதலாகிய பேறு, அல்ல - அல்லாதவையாகிய, பிற- பிற சிறந்த பேறுகள் இருப்பதாக, யாம் அறிவது இல்லை - யாம் அறிந்து மதிப்பதேயில்லை.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* ஒருவன் பெறும் பொருள்கள் அறிவுடைய மக்களைப் பெறுதல்; பயன்படுவ தொழிந்த பொருள்கள் எல்லாம் அவற்றினும் சிறந்தனவாக யாம் கண்டறிவதில்லை.

*(பரி.உரை)* ஒருவன் பெறும் பேறுகளுள் அறியவேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதல் அல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை.

*(தெளிவுரை)* ஒருவர் பெறவேண்டிய பேறுகளுள், அறிய வேண்டியவைகளை அறியவல்ல நன்மக்களைப் பெறுதலைத் தவிர வேறு பேறுகளை யாம் மதிப்பதில்லை.

*(ஆராய்ச்சி உரை)* உலகில் மனிதர் பெறவேண்டிய பேறுகளுக்குள் சிறந்த பேறு பிள்ளைப் பேறே என்பது கருத்து. சிறந்த பேறு வேறு இருப்பதாக இதுவரையும் அறிந்ததும் இல்லை; இனிமேலும் என்றும் அறியப் போவதும் இல்லை என்ற கருத்தை உள்ளடக்கி, "அறிவது இல்லை" என எதிர்காலத்தால் கூறிய புலவரின் புலமை புகழ்தற்குரியது.

என்ன! இல்லற இயலை விளக்கவந்த வள்ளுவர், கணவனுக்கும் மனைவிக்கும் மாட்சிமை வேண்டும் என்றார்; அன்பு வேண்டும் என்றார்; விருந்தோம்புதல் வேண்டும் என்றார்; இனியவை கூறல், செய்ந்நன்றி யறிதல் முதலியனவும் வேண்டும் என்றியம்பியுள்ளார்; இவற்றைப்போலவே, கணவனும் மனைவியும் பிள்ளைகளைப் பெறுவதிலும் கருத்தூன்ற வேண்டும் என்று கூறியுள்ளாரோ! இதனைக் கூடவா மக்களுக்குச் சொல்லித்தர

வேண்டும்? அதிலும் பொதுமறையாகிய திருக்குறளிலா புகலவேண்டும்? அல்லது, இக்காலத்துப் போர்களினால் மனிதப்பஞ்சம் ஏற்பட்டதனால், மிகுதியாகப் பிள்ளை பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று விளம்பரம் செய்து தூண்டும் சில நாடுகளுக்கு ஏற்பட்ட நிலை, நம் நாட்டிற்கும் வள்ளுவர் காலத்தில் ஏற்பட்டதா? என்றெல்லாம் வேடிக்கையான மனக்கிளர்ச்சிகள் விளையலாம் சிலர்க்கு.

பூணூல் பூண்டவர்கள் (இருபிறப்பாளர்) தென்புலத்தார் கடனைக் கழிப்பதற்காகப் பிள்ளை பெற்றே தீரவேண்டும் என்று பதமாகப் பகர்ந்துள்ளார் பரிமேலழகனார். அப்படியானால் மற்றவர் பிள்ளைபெற வேண்டியதில்லை போலும்! நாம் தென்புலத்தார் கடனைக் கழிக்கவேண்டும்; மோட்சத்திற்குச் செல்லவேண்டும் என்ற கருத்தைத்தான் காதலர் கண்கள் ஒன்றுக்கொன்று அறிவித்துக் கொள்ளுகின்றன போலும்! ஆண்-பெண்களின் கூட்டுறவின்போது அந்நோக்கந்தான் முதலிடம் பெறுகின்றது போலும்! விசுவாமித்திர முனிவர் முதல் வீரப்பன் வரையும், அகலிகை முதல் ஆண்டிச்சிவரையும் சிற்றின்பத்தில் ஈடுபட்டதற்குரிய காரணம் என்னவென்பது எவர்க்கும் தெரியாதுபோலும்!

இன்ப உலகின் இயல்புகளை எடுத்தோதி, அவற்றுள் சீர்திருத்தம் காண்பிப்பதே, பண்டைய செந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பியல்பாகும். இத்தகையதே திருக்குறளின் மக்கட்பேறும். வாழ்க்கையில் எவ்வளவு இன்பம் இருப்பினும் குழந்தை யில்லாவிட்டால் என்ன பயன்? தமக்குப்பின் குடும்பத்தின் நிலை என்ன? கொழுகொம்பில்லாத கொடிபோல் குன்றுமே வளர்ச்சி! உலகில் எப்பொருள் தோன்றினாலும் பிள்ளைப்பேறு இல்லாவிடின் உலகந்தான் நடைபெறுவது யாங்ஙனம்?

எனவே, மணம் செய்துகொள்ளாமல் உண்மைத்துறவு கொண்டோர் சிலரும், துறவு, கைம்மை என்னும் திரை மறைவில் ஒளிந்து வாழ்ந்து கருவைச் சிதைப்போர் சிலரும், மணந்து கொண்டும் பிள்ளை பெறாதவர் சிலரும், பிள்ளை பெற்றும், தம்முடைய

ஒழுக்கக்குறைவாலும், வளர்த்து முன்னுக்குக் கொண்டுவரும் திறமை இல்லாததாலும் பிள்ளைகளைப் பயனற்றவராக்கித் தாமும் பயன்பெறாது போகின்ற சிலரும் உலகில் உள்ளனர். ஆதலால், அவர்களை நோக்கி, மனிதர்களே! அறிவு நிரம்பிய நன்மக்களைப் பெற்று, பயன்பெற்று உலக வளர்ச்சிக்கும் உதவுதலே சால அழகிதாம் என்று கூறியுள்ளார் திருவள்ளுவனார். மேலும், நிலநீர், வீடுவாசல், நகைநட்டு முதலியவற்றைப் பெறுவதைப் பேறு என்னாமல், பிள்ளைபெறுவதையே "பேறு" (பெறுதல்) என்னும் சொல்லால் குறிக்கின்றனர் தமிழ் மக்களும். எடுத்துக்காட்டு வேண்டுமானால், "என் மகள் கருவுற்றிருக்கின்றாள், பிள்ளைப்பேறு பார்ப்பதற்குப் பணம் வேண்டும்" என்றும், "தாய் மகளுக்குப் பிள்ளைபேறு பார்ப்பதற்காக வந்திருக்கிறாள்" என்றும் வழங்கும் உலக வழக்குக்களே போதுமே! இவ்வுலக வழக்குக்களும், இம்முதற் குறளும் ஒன்றுக்கொன்று உறுதுணையன்றோ?

அறிவற்ற பயனற்ற பிள்ளைகளைப் பெறுவதைவிட பெறாமலே இருப்பதும், மரக்கட்டையைப் பெறுவதும், பொம்மைகளை வைத்துக்கொண்டு கொஞ்சுவதும் நல்லது; ஏன்? பெருந்துன்பமும், பொருட்செலவும் குறையும் அன்றோ; இக்கருத்தை அடக்கி அறிவறிந்த மக்கள் என்று பாடியுள்ள நயம் நன்று நன்று!

*2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்.*

(பதவுரை) பழி பிறங்கா - பழிக்கு இடம் இல்லாத, பண்புடை - நல்ல குணங்களையுடைய, மக்கள் - பிள்ளைகளை, பெறின் - பெற்றால், (பெற்றோர்க்கு) எழுபிறப்பும் - ஏழு பிறப்புக்களிலும் கூட, தீயவை - தீய தீமைகள், தீண்டா - சேராவாம்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண-உரை)* எழு பிறப்பினும் துன்பங்கள் சாரா; ஒரு

பிறப்பிலே பழியின்கண் மிகாத குணத்தினை யுடைய புதல்வரைப் பெறுவாராயின்.

*(பரி-உரை)* வினைவயத்தால் பிறக்கும் பிறப்பு ஏழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா, பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவானாயின்.

*(தெளிவுரை)* பிள்ளைகள் கெட்டவராய் இருந்தால், பெற்றோர்களுக்கும் கெட்ட பெயரும், கெடுதியும் நேரிடுகின்றன. பிள்ளைகள் நல்லவராயிருந்தால், பெற்றோர்களுக்கும் நல்ல பெயரும், நன்மைகளும் ஏற்படுகின்றன. நன்மை ஒரு வேளை மட்டுமா? ஒரு நாளைக்கு மட்டுமா? இல்லை, எப்பொழுதும், எந்நாளும் நன்மையே! என்பதை வற்புறுத்துவதற்காகவே "எழு பிறப்பும் தீயவை தீண்டா" என்று திருவாய் மலர்ந்தார் திருவள்ளுவனார்.

3. *தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்*
*தந்தம் வினையான் வரும்.*

*(பதவுரை)* தம் பொருள் - (பெற்றோர்களாகிய) தம்முடைய செல்வம், தம் மக்கள் - தம்முடைய பிள்ளைகளே, என்ப- என்று சொல்லுவர் அறிஞர். அவர் பொருள் - அப்பிள்ளைகளுடைய செல்வம், தம்தம் வினையால் - (பெற்றோர்களாகிய) தங்கள் தங்களுடைய தொழிலினால், வரும் உண்டாகும்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* தம்முடைய பொருள் என்று சொல்லுவர் உலகத்தார் தம் மக்களை; அம்மக்களுடைய பொருள் தம் தம்முடைய வினையோடே கூட வருதலான்.

*(பரி-உரை)* தம் புதல்வரைத் தம் பொருள் என்று சொல்லுவர் அறிந்தோர்; அப்புதல்வர் செய்த பொருள் தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான்.

*(தெளிவுரை)* பெற்றோர்களுடைய செல்வம் பிள்ளைகளே. பெற்றோர் தொழில்செய்து ஈட்டும் செல்வம் பிள்ளைகளுடையதாம். பெற்றோர்கள் தாம் தொழில் செய்து ஈட்டும் செல்வத்தைத் தம் பிள்ளைகளுடையதாகவும், தம் பிள்ளைகளைத் தம்முடைய செல்வமாகவும் கருதுவது என்றும் இயற்கைதானே இவ்வுலகில்!

*(ஆராய்ச்சி உரை)* தம்தம் வினையால் என்பதற்கு, தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையானே என்று பகர்ந்துள்ளார் பரிமேலழகனார். அஃதாவது, பெற்றோரை நோக்கிப் பிள்ளைகள் செய்யும் நல்வினையால் பிள்ளைகளின் பொருள் பெற்றோர்க்குச் சேருமாம். இத்தகைய தொடர்களைப் பொருளாக எழுதுவதற்கு உண்மையில் குறளில் இடமிருக்கிறதா? வலிந்து எழுதியிருப்பதாகத் தோன்றவில்லையா? தம் என்பது, முதல் அடியில் பெற்றோரைக் குறிப்பதனால், இரண்டாவது அடியிலுள்ள தம் தம் என்பனவும் பெற்றோரைக் குறிக்க, வினை என்பது பெற்றோர் செய்யும் தொழிலைக் குறிப்பதாக நேர்முகமுறையில் பொருள் எழுதப்பட்டது எம்மால்.

தொழில் என்னும் பொருளில் வினை என்னும் சொல்லை எண்ணற்ற இடங்களில் எடுத்தாண்டுள்ளார் வள்ளுவராதலின், பெற்றோர் தாம் ஈட்டும் பொருளைத் தமதாக எண்ணாமல், தம் மக்களுடையதாக எண்ணி, அம்மக்களையே தம் பொருளாக எண்ணுவாரேயானால், அம்மக்களை நன்முறையில் பேணி வளர்த்து முன்னுக்குக் கொண்டுவர முடியுமல்லவா? இக்கருத்தே இக்குறளின் நோக்கம்.

## 4. *அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
## *சிறுகை யளாவிய கூழ்.*

*(பதவுரை)* தம் மக்கள் - தம் பிள்ளைகள், சிறுகை - தம் சிறிய கைகளால், அளாவிய - பிசைந்து துழாவிய, கூழ் - உணவானது, அமிழ்தினும் - (சுவையில் மிக்க) அமிழ்தத்தைக் காட்டிலும், ஆற்ற-

மிகவும், இனிது -இனிமை உடையதாம். (ஏ-ஈற்றசை)

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* இனிமை உடைத்தாகிய அமிழ்தினும் மிக இனிது; தம்முடைய மக்கள் சிறு கையாலே அளையப்பட்ட கூழ்.

*(பரி.உரை)* சுவையான் அமிழ்தத்தினும் மிக இனிமை யுடைத்து, தம் மக்களது சிறுகையான் அளாவப்பட்ட சோறு.

*(தெளிவுரை)* தம் பிள்ளைகள் சிறுகைகளால் துழவிப் பிசைந்த உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தினும் மிக இனிக்கும்.

*(ஆராய்ச்சி உரை)* ஒருவர் உண்ணும்போது அவ்வுணவில் பிறர் வந்து கையை இட்டுப் பிசைந்து சிதைப்பாரேயானால் உண்ணுபவர்க்குப் பிடிக்காது. ஆனால், அவருடைய சிறு குழந்தை வந்து உணவில் கையை இட்டுப் பிசைந்து வாரி இறைக்குமேயானால் அவ்வுணவு சுவையில் மிகுந்த அமிழ்தத்தைக் காட்டிலும் அவர்க்கு இனிக்கும் என்பது உலகத்தில் உள்ள உண்மைதானே!

'பல்வகைச் செல்வங்களைப் படைத்துப் பலரோடு உண்ணக்கூடிய பெருஞ் செல்வராயினும் சரியே: குறு குறுவெனத் தளர்நடை நடந்தும், சிறிய கையை நீட்டி உணவில் இட்டும், தொட்டும், கௌவியும், துழாவியும், உடம்பின் மேலே வாரி இறைத்தும் மனத்தை ம்யக்குகின்ற மக்களைப் பெறாதோர்க்கு வாழ்நாளில் பயன் ஒன்றும் இல்லை" என்னும் கருத்துடைய செய்யுள் ஒன்று, பழந்தமிழ்ச் சங்க நூலாகிய புறநானூற்றில் உள்ளது. அது வருமாறு:-

*"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்*
*உடைப்பெரும் செல்வ ராயினும் இடைப்படக்*
*குறுகுறு நடந்து சிறுகை நீட்டியும்*
*இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்*

*நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்*
*மயக்குறு மக்களை இல்லோர்க்குப்*
*பயக்குறை வில்லைதாம் வாழு நாளே"*

என்பது புறநானூற்றுச் செய்யுள் (188). ஈண்டுரைத்த குறளின் விளக்கமே இப்புறச் செய்யுள் என்றால் பொருந்தும்.'

*5. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்*
*சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.*

*(பதவுரை)* மக்கள் - தம் பிள்ளைகளுடைய, மெய்-உடம்பினை, தீண்டல்-தொடுதல், உடற்கு இன்பம் - (பெற்றோர்களின்) உடலுக்கு இன்பமாயிருக்கும், மற்று - பின்பு, அவர் - அப்பிள்ளைகளுடைய, சொல் கேட்டல் - இனிய (மழலை) சொற்களைக் கேட்டல், செவிக்கு இன்பம் - காதுக்கு இன்பமாயிருக்கும். மக்கள் மெய் தீண்டல் என்பதற்கு, பிள்ளைகள் பெற்றோருடைய உடம்பினைத் தீண்டுதல் என்றும் பொருள் கொள்ளலாம்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண. உரை)* தம்மக்கள் தமதுடம்பினைச் சார்தல் தம்முடம்பிற்கு இன்பமாம்; அவர் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பமாம்.

*(பரி. உரை)* ஒருவன் மெய்க்கு இன்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்; செவிக்கு இன்பமாவது அவரது சொல்லைக் கேட்டல்.

*(தெளிவுரை)* குழந்தைகளின் உடலைத் தொடுதல் பெற்றோர்களின் உடலுக்கு இன்பம். அடுத்து அவர்தம் சொற்களைக் கேட்டலோ காதுக்கு இன்பமாம்.

*(ஆராய்ச்சி உரை)* சில சமயங்களில் பெற்றோர் பெரிய துன்பக் கடலுள் மூழ்கியிருக்கும்போது, பிள்ளைகள் வந்து உடம்பைத் தொட்டும், இனிய மழலைகளைப் பேசியும் மகிழ்விக்க, திரும்பவும் பெற்றோர் இன்பக் கடலுள் மூழ்கி இறுமாப்பதைக் காண்கின்றோம்.

ஆடம்பர உடையில் அவா மிக்க இளைஞன் ஒருவனை எடுத்துக் கொள்வோம். அவன் தன் இளமையில் மடிப்புக்கலங்காத (பெட்டி போட்ட) சட்டையை அணிந்துகொள்கின்றான். எவரேனும் அச்சட்டையைத் தொட்டால், "தொடாதே, மடிப்புக் கலங்கிவிடும்" என்று சினக்கிறான். தன் தம்பியோ, தங்கையோ மேலே வந்து விழுந்தால், "நான் கலங்காமல் வெண்மையான உடை உடுத்தியிருக்கிறேன்; ஏன் மேலே விழுந்து அழுக்காக்கினீர்கள்?" என்று கூறி அடிக்கிறான். நண்பர் எவரேனும் தோளின்மேல் கையை வைப்பார்களேயானால், பதமாகக் கையை எடுத்துக் கீழே விட்டு, சட்டை கலங்காமல் பார்த்துக் கொள்கின்றான்.

அவ்விளைஞனுக்கு மணப்பருவம் நெருங்கியது. மணம் நிகழ்ந்தது. குழந்தை பிறந்தது. தெருவிலே, புழுதியிலே விளையாடிக் கொண்டிருக்கின்றது குழந்தை. தந்தை ஆடம்பரமாக உடுத்திக்கொண்டு அயலூர்க்குப் புறப்படலானான். வீட்டை விட்டுத் தெருவிலே காலை வைத்தான். பார்த்தது குழந்தை. புழுதி படிந்த உடம்போடு,"அப்பா நானும் வருகிறேன்" என்று கூறிக் கட்டிக்கொண்டது. விலக்கி உள்ளே அனுப்ப முயற்சிசெய்தான். முடியவில்லை. தேம்பியது குழந்தையின் வாய். தூக்கி மார்போடணைத்துக் கொண்டான் தந்தை. முத்தமிட்டுக் காசு தந்து உள்ளே அனுப்பினான். குழந்தையின் புழுதி படிந்த உடம்பைத் தழுவியதில் தந்தைக்கோர் தனியின்பம்! "நானும் வருகிறேன்" என்ற பேச்சில் ஒரு பேரின்பம்.

தெருவிலே தேரின்மேல் ஏறிப் புறப்பட்ட தந்தையைக் குழந்தை தடுக்க, தந்தை கீழே இறங்கி மார்போடணைத்துக்கொண்டு மகிழ்ந்ததாக ஒரு நிகழ்ச்சி பண்டைய நூலாகிய அகநானூற்றிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வின்பமே இக்குறளில் இயம்பப்பட்டுள்ளது.

### 6. *குழலினிது யாழினிது என்பதம் மக்கள்*
### *மழலைச்சொல் கேளா தவர்.*

*(பதவுரை)* தம் மக்கள் - தம் பிள்ளைகளுடைய, மழலைச் சொல் - இனிமையான குதலை மொழிகளை, கேளாதவர் - கேட்காதவர்களே, குழல் இனிது -புல்லாங்குழலின் ஓசை இனிமையாய் இருக்கின்றது. யாழ் இனிது - யாழின் ஓசை இனிமையாய் இருக்கின்றது, என்ப - என்று சொல்லுவார்கள்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* குழலோசை இனிது, யாழோசை இனிது என்று சொல்லுவர் தம் மக்களது மழலைச் சொற்களைக் கேளாதவர்; கேட்டவர் சொல்லார்.

*(பரி.உரை)* குழலிசை இனிது, யாழிசை இனிது என்று சொல்லுவர், தம் புதல்வருடைய குதலைச் சொற்களைக் கேளாதவர்.

*(தெளிவுரை)* தங்களுக்குப் பிறந்த குழந்தையின் மழலைப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தவர்கள், புல்லாங்குழல், யாழ் முதலிய இசைக்கருவிகளின் இசை இனிமை உடைத்து என்று இயம்ப மாட்டார்கள். தங்கள் குழந்தையின் கொஞ்சலைக் கேளாதவர்களே பிற இசைகளைப் புகழ்வார்கள். வள்ளுவர் இங்ஙனம் கூறியதன் கருத்து, குழந்தையின் கொஞ்சல் மிக மிக இனிது என்பதை வற்புறுத்துவதே!

### 7. *தந்தை மகற்காற்று நன்றி அவையத்து*
### *முந்தி யிருப்பச் செயல்.*

*(பதவுரை)* தந்தை - ஒரு தகப்பன், மகற்கு - தன் மகனுக்கு, ஆற்றும் - செய்யவேண்டிய, நன்றி - உதவியாவது, அவையத்து - (கற்றார் நிறைந்த) அவையிலே (சபையிலே), முந்தி இருப்ப-

(கல்வி, கேள்வி, அறிவு, ஆராய்ச்சி, சொல்வன்மை முதலியவற்றில்) முன்னணியில் இருக்கும்படி, செயல்-செய்வதாம் - அஃதாவது கல்வியறிவு உடையவனாக்குதலாகும்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* தந்தை மகனுக்குச் செய்யும் உபகாரம், அவையத்தின் கண்ணே முந்தியிருக்குமாறு கல்வி உண்டாக்குதல்.

*(பரி.உரை)* தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது, கற்றார் அவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வியுடையன் ஆக்குதல்.

*(தெளிவுரை)* தந்தை தன் மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மையாவது கற்றவர் கழகத்தில் அவன் கல்வியறிவில் முன்னணியில் திகழும்படியாகச் செய்தலாம்.

*(ஆராய்ச்சி உரை)* ஒரு தந்தை தன் மைந்தனுக்குத் தேடித்தர வேண்டிய பொருள், வீடுவாசலா? நிலம் நீரா? காசு பணமா? அழகிய மணப்பெண்ணா? இல்லையில்லை! இவற்றினும் மேலான கல்வியறிவே! ஏனையவற்றை அறவே அளிக்க வேண்டாம் என்றும் சொல்ல வரவில்லை. அவற்றை மட்டும் அளித்துக் கல்வியை அளிக்காமல் விடுதல் கூடாது என்பது இங்குக் கருத்து.

ஏன்? ஏனையவை தந்தைக்குப்பின் அழியினும் அழியும். ஆனால், கல்வி அழியாத விழுமிய பொருளன்றோ? இது குறித்தே.

*"எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன*
*விச்சை மற்றல்ல பிற"*

என நாலடியாரும் நவில்கின்றது.

## *8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது.*

*(பதவுரை)* தம் மக்கள் - தம்முடைய பிள்ளைகள், அறிவு உடைமை - அறிவு உடையவராய் இருத்தல், தம்மின் -தம்மைக் காட்டிலும் (அஃதாவது தமக்கு இன்பமாய் இருப்பதைக் காட்டிலும்), மாநிலத்து - பெரிய நில உலகிலே, மன் - நிலைத்துள்ள, உயிர்க்கு எல்லாம் - உயிர்களுக்கு எல்லாம் (அஃதாவது அறிவுள்ள மனிதர்களுக்கெல்லாம்), இனிது - இன்பமாயிருக்கும்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* தம்மக்கள் அறிவுடையாரானால், அது தம்மினும் உலகத்துயிர்கட்கெல்லாம் இனிதாம்.

*(பரி.உரை)* தம் மக்களது அறிவுடைமை பெரிய நிலத்துமன்னா நின்ற உயிர்கட்கெல்லாம் தம்மினும் இனிதாம்.

*(தெளிவுரை)* தம் பிள்ளைகள் அறிவுத் திறமையால் செய்யும் ஆக்கவேலைகள், தம்மை விட, பெரிய உலகில் என்றும் வாழும் உயிர்கட்கெல்லாம் இனிய நன்மை பயக்கும்.

*(ஆராய்ச்சி உரை)* பிள்ளைகள் அறிவுடையராய் இருந்தால் மகிழ்ச்சி பெற்றோர்க்கு மட்டுமா? பெற்றோரைவிட, உலகத்துள்ள உயர்ந்த மனிதர்கள் மிகுதியாக மகிழ்வார்கள். எப்படி? பெற்றோர் தம் ஆயுள் வரையும், வீட்டில் மட்டும் மகிழ்வார்கள். உலகினரோ, பிள்ளைகள் இருக்கும் வரையும், இறந்த பின்னும் பல துறைகளில் மகிழ்வார்கள். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் மகிழ்வார். தொழில் செய்யும் இடத்தில் தலைவர் மகிழ்வார். அரசாங்கம் மகிழும். பயன்பெறும் ஏழைகள் மகிழ்வர். இன்னும் எல்லோர்க்கும் எப்போதும் மகிழ்ச்சியேயன்றோ? திருவள்ளுவர் முதலியோரின் அறிவு பற்றி

அவர்களின் பெற்றோர்களைவிட உலகம் அன்றும், இன்றும், என்றும் - மகிழ்ந்ததே, மகிழ்கின்றதே, மகிழுமே!

இரட்டுற மொழிதல் (இரண்டு பொருள்படச் சொல்லுதல்) என்னும் இலக்கண விதிப்படி, இக்குறளுக்கு இன்னொரு பொருளும் இயம்பலாம். அஃதாவது, "பெற்றோராகிய தங்களின் அறிவைக் காட்டிலும் பிள்ளைகள் மிகக் அறிவுடையவராயிருப்பது உலகோர்க்கு உவகை யளிக்கும்" என்பதாம். புலியின் வயிற்றில் பூனை பிறத்தலாகாது. ஆனால், சிப்பியின் வயிற்றில் இப்பி(முத்து) பிறப்பது குறித்து உலகம் உவக்கின்றதன்றோ?

வேறொரு பொருளும விளம்பலாம் இக்குறட்கு! அஃதாவது, "உலகிலுள்ள எல்லாப் பெற்றோர்களுக்கும் தங்கள் தங்களைக் காட்டிலும், தங்கள் தங்கள் பிள்ளைகள் மிக்க அறிவுடையவரா யிருப்பது மனத்திற்கு மகிழ்ச்சி யளிக்கும்" என்பதாம். பெற்றோரினும் பிள்ளைகள் அறிவிற் பெரியவராய் விளங்குவதால் பெற்றோர்க்குப் புகழ்ச்சி பெருகுந்தானே!

*9. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.*

*(பதவுரை)* தன் மகனை - தன் பிள்ளையை, சான்றோன் என - கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று (அறிவுடையோர்) சொல்ல, கேட்டதாய் - (அப்புகழ்மொழிகளை, பொய்கூறாத அவ்வறிஞர் வாயின் மூலமாகக்) கேட்ட தாயானவள், ஈன்ற பொழுதின் - (அப்பிள்ளையைப்) பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் இப்போது, பெரிது - மிகவும், உவக்கும் - மகிழ்ச்சியடைவாள்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண. உரை)* தான் பெற்ற காலத்தினும் மிக மகிழும், தன்

மகனைச் சான்றோன் என்று பிறர் சொல்லக் கேட்ட காலத்துத் தாய்.

*(பரி. உரை)* தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும், தன் மகனைக் கல்வி கேள்விகளான் நிறைந்தான் என்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாய், .... பெண்ணியல்பால் தானாக அறியாமையால் கேட்ட தாய் எனவும் கூறினார்.

*(தெளிவுரை)* பத்துத் திங்கள் வருந்திச் சுமந்து நொந்து பெற்ற தாயின் பொறையுயிர்ப்புத் துன்பத்தைப் (பேறுகால வேதனையைப்) போக்கும் மருந்து குழந்தையின் குரலன்றோ? பிறந்த உடனே குழந்தை, "குவா, குவா" என்று குழறுவதைக் கேட்டதும், துன்பத்தில் தோய்ந்துள்ள தாய்க்குக் கட்டுக்கடங்காத களிப்பு! மட்டற்ற மகிழ்ச்சி! அம்மகிழ்ச்சியைக் காட்டிலும் தன் பிள்ளை கல்வியறிவில் தேர்ந்தவன் எனப் பிற பெரியோர் புகழ்வதைக் கேட்டபோது பெரிதும் மகிழ்வாள் தாய் என்பது கருத்து.

*(ஆராய்ச்சி உரை)* பிள்ளைகளின் திறமையை அறியும் அறிவு பெண்கட்கு இல்லையாதலின், பிறர் கூறக் கேட்டே அறிய வேண்டும் என்னும் கருத்துப்பட வரைந்துள்ளார் பரிமேலழகர். தாமே அறியும் திறமை பெண்டிர்க்கு இருப்பினும், இல்லாவிடினும், "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்றபடி தம் சிறப்பில்லாத பிள்ளைகளையும் சிறப்புடையவர்களாகக் கருதுவது பெரும்பாலும் பெற்றோர்க்கு இயல்பாகலின், பிள்ளையின் புகழைப் பிறர்வாயால் கேட்டு மகிழ்வதே பெருமகிழ்வாகும் என்னும் கருத்துப்படப் பாடியுள்ளார் வள்ளுவர் என்பதைப் பரிமேலழகர் அறிந்திலர் போலும்!

### *10. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல்.*

*(பதவுரை)* மகன் - ஒரு பிள்ளை, தந்தைக்கு-(தன்னைப் பெற்றுக் கல்வியறிவு ஒழுக்கம் உடையவனாக ஆக்கிய தன்னுடைய)

தகப்பனுக்கு, ஆற்றும் - செய்யவேண்டிய, உதவி - பதில் உதவி (யாதெனின்) (பிறர் தன் கல்வியறி வொழுக்கங்களைக் கண்டு) இவன் தந்தை - இப்பிள்ளையின் தகப்பன், என் நோற்றான் கொல் - (இப்பிள்ளையைப் பெறுவதற்கு) என்ன தவம் செய்தானோ, எனும் சொல் - என்று பாராட்டும் புகழ்மொழியாகும்.

இனி முறையே மணக்குடவர் உரையும் பரிமேலழகர் உரையும் வருமாறு :

*(மண.உரை)* மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரம், இவன் தந்தை என்ன தவம் செய்தான் என்று உலகத்தார் சொல்லும் சொல்லைப் படைத்தல்.

*(பரி.உரை)* கல்வியுடையனாக்கிய தந்தைக்கு மகன் செய்யும் கைம்மாறாவது, தன்னறியும் ஒழுக்கமும் கொண்டார், இவன் தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தான் கொல்லோ என்று சொல்லும் சொல்லை நிகழ்த்துதல்.

*(தெளிவுரை)* இவனைப் பெறுவதற்கு இவன் பெற்றோர் என்ன தவம் செய்தார்களோ என்று பிறர் தன் கல்வியறிவு ஒழுக்கம் முதலியன பற்றித் தன் பெற்றோரைப் புகழும்வண்ணம் ஒவ்வொரு பிள்ளையும் நடந்துகொள்ளவேண்டும்.

*(ஆராய்ச்சி உரை)* இப்பகுதியுள் தந்தை மகளுக்குச் செய்வதென்றோ, தாய் மகனுக்குச் செய்வதென்றோ, மகள் தந்தைக்குச் செய்வதென்றோ, மகன் தாய்க்குச் செய்வதென்றோ குறிப்பிடாமல், தந்தைக்கும் மகனுக்குமே தொடர்பு காட்டியிருத்தலின், அறிவுடையவர்கள் ஆண் பிள்ளைகளே என்பது நன்கு போதரும்; ஆதலின் புதல்வர் என்பதே பொருந்தும் எனின், மொழியுதும் : - அமிழ்தம் உண்டவன் வாழ்வான் என்றால், அமிழ்தம் உண்டவள் வாழ்வாள், உண்டவர் வாழ்வார், உண்டது வாழும், உண்டன வாழும்

என மற்றைய பால்களும் கொள்ளலாம் என்பதை 'ஒருமொழி ஒழிதன் இனம் கொளற்கு உரித்தே' என்னும் நன்னூல் விதி உணர்த்து கின்றதன்றோ? அவ்விதிப்படியே ஈண்டும் மகன் என்றபோதெல்லாம் மகள் என்றும் கொள்ளலாமே!

## அதிகாரச் சுருக்கம்

எல்லாப் பேற்றினும், நல்ல பிள்ளைப்பேறே சாலச் சீரிது, அப்பேறு பெற்றவர்க்கு எப்போதும் துன்பங்கள் அணுகா. மெய், வாய், கண், செவி என்னும் பொறிகட்கு மிக்க இன்பம் கிடைக்கும். இத்தகைய பிள்ளைகளைக் கல்வியறிவு ஒழுக்கங்களில் சிறந்தோராக்குதல் பெற்றோர்க்குக் கடமை. பெற்றோர்க்குப் பெரும்புகழ் உண்டாக்குதல் பிள்ளைகட்குக் கடமை.

❖ ❖ ❖



## மணவாழ்வின் இன்றியமையாமை

ஆணாகட்டும் - பெண்ணாகட்டும்! திருமணம் செய்து கொள்ளாமல் தனித்து வாழலாகாது; மணந்து இணைந்தே வாழவேண்டும். இதற்குரிய காரணங்களாவன :

1. மாறுபட்ட உருவ அமைப்புடன் ஆணும் பெண்ணுமாய்ப் படைத்திருக்கின்ற இயற்கையின் நோக்கமே, இருசாராரும் மணந்து வாழவேண்டும் என்பதே.

2. இயற்கையின் முறையீடாகிய காமஉணர்வை அடக்குவது எவர்க்கும் அரிது. அடக்கவுங் கூடாது.

3. நீண்டநாள் மணந்து கொள்ளாது தனித்து வாழ்ந்த சிலர், பின்னர் அத்தனி வாழ்க்கையில் தோல்வியுற்று வயதான காலத்தில் மணந்து கொண்டிருக்கின்றனர்.

4. இறுதிவரையுமே மணந்து கொள்ளாத சிலர் இடையிடையே தவறிவிட்டிருக்கின்றனர்.

5. திருமணம் செய்துகொள்ளாதவர்கள், இல்வாழ்க்கையால் பெறக்கூடிய எத்தனையோ வாய்ப்பு வசதிகளை -எத்துணையோ வளங்களை - எவ்வளவோ நற்பேறுகளை வீணாய் இழந்து விடுகின்றனர்.

6. மேலும் இவர்களுடைய பெற்றோர்கள் வயது முதிர்ந்து வருந்துங் காலத்தில், அவர்கட்கு உணவு முதலிய வசதிகளை இவர்கள் எவ்வாறு செய்தளிக்க முடியும்? அது இவர்களுடைய இன்றியமையாக் கடமையாயிற்றே? விருந்தினர், இரவலர் முதலியோர் வரின் என்ன செய்வார்கள்? இவர்கள் பாடே திண்டாட்டமாயிற்றே! அப்போது இன்னொருவரது கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

7. இவர்கள் திருமணம் செய்துகொள்ளாது தப்பித்துக் கொண்டார்கள்; ஆனால் இவர்கட்கு அன்றாடம் தேவைப்படுகின்ற உணவு ஆக்குதல், பிணிவந்துவிடின் மருத்துவ வேலை, வயதான காலத்தில் பணிவிடை - இன்னபிறவற்றை யார் ஆற்றுவது? திருமணம் செய்துகொண்டு வாழும் குடும்பத்தார்கள் தாமே இவர்கட்கு இவையெல்லாம் செய்ய முடியும் - செய்தும் வருகின்றார்கள்? இவர்கள் மீந்துகொள்ள இன்னொருவர் உழைப்பதா? இது என்ன முறை?

- பேராசிரியர் சுந்தர சண்முகனாரின் "இன்ப வாழ்வு" நூலிலிருந்து